ஸ்ரீ

# திருமங்கையாழ்வார்.

திருச்செங்கோடு

போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

தே. இராமாநுஜ ரெட்டியார் அவர்களால்

எழுதப்பெற்றது


மதுரை, புத்தகவர்த்தகம்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

வெளியிட்டது


காபிரைட் ரிஜிஸ்டர்] 1929 [விலை அணா 8.

Printed at
The Excelsior Press,
Madura

# Foreword.

I had very great pleasure in going through this book from start to finish. To me it appears to be a novel crop in the field of Tamil Literature for the following among other reasons (1) The hero, a staunch Vaishnavite, has been depicted in a manner which endears him even to the staunch Saivaite of Shiyali. Evidently the author has very carefully avoided all controversial sectarian topics. (2) The style is quite free from orientalism of any kind and flows in gentle rhythm like the tiny ripples of a calm stream. Neither highly ambitious, nor descending to the common place and colloquialism, it gives atonce, that clearness of exposition and simplicity of language, which form the basis of every living language.

The choice of words and the aptquotations—some of them modified here and there—do so well fit into the subject matter that it is quickly adapted even of after a single reading. This is the sort of the style to be cultivated in the Tamil syllabus of our High School classes. Therefore, the author, himself a High School Tamil Pandit, deservs to be congratulated in having introduced into the Tamil world, a literature of the much desired type.

Chapters 1 to 5 are smooth sailing while chapters 6 and 10 are rather monotonus, but this is only a monotony necessary to the character of a hero who has dedicated his life to the service of his God and his devoted through apparently a list of pilgrim centres in southern India, it is a Vishnu Puranam in a nut shell, as, the allusions explained it promises to enrich the minds of the thoughtful readers

The author has tried to give satisfaction even to the adverse critic in justifying the hero's conduct as a plunderer and a robber For, if he robbed the a theistic rich, it was to reward the poor devotees, and if he plundered the opulent, he fed the needy, "who, taught by these, confess the Almighty just"

A K PADMANABHACHAR, B A, L T,

# முகவுரை.

ஒரு நாடு முன்னேற்ற மடைதற்குக் கல்வியே இன்றியமையாச் சாதனமாம். எந்த நாட்டு மக்கள் கல்வித்துறையில் மேம்பட்டு நிற்கின்றார்களோ அந்த நாடு பலவளங்களும் மலியப்பெற்றுச் சீரும் சிறப்புமுற்று, மற்றையநாடுகளினும் உயர்வுடையதாய்த் திகழுமெனப்படுதலின் கல்வியே மக்கட்கு உயிரினும் சிறந்தபொருளெனக் கருதிக் கலைஞானத்தை விருத்திசெய்யும் அறிஞரால் செல்வம் பெருகிச் செழித்து வரும் மேனாடுகள் நமக்கு வெள்ளிடைமலை போல் நின்று தெள்ளிதின் உணர்த்தி வருகின்றன.

ஆதலின், நம்நாடு சிறப்பெய்தும் பொருட்டு நம்நாட்டுப் பெரியார் தம்நாட்டு மக்கட்குக் கல்விஞானத்தைப் போதித்து, அது நாடோறும் விருத்தியடையுமாறு செய்தல் வேண்டும். அங்ஙனம் போதிப்பதிலும் 'இளமையிற் கல்' என்றபடி இளம்பருவமே கல்வியுறுதற்குரியதாதலின், இளைஞர்க்கே மிகுதியும் போதித்தல் வேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பெரியார் திருவாக்கின்படி, பிள்ளைகள் இளமையில் எதைப் பழகுகின்றார்களோ அதுவே அவர்களிடம் எக்காலத்தும் நிலைபெற்றிருக்கும். ஆதலின் அவர்களுக்குக் கல்வி புகட்டுங்கால் பயனற்ற பாடங்களைப் போதித்தல் கூடாது, அவர்கள் நாடு முன்னேறுவதற்கான வழிகளையும், வாழ்க்கையை இனிதாக நடத்துவதற்குரிய மார்க்கங்களையும், ஆன்மா நற்கதியடைதற்கான நெறிகளையும், தெய்வபக்தி, அடியார்பக்தி, அடக்கம், மெய்ம்மைகூறுதல் முதலிய பல அறநெறிகளையும், விவசாயம், கைத்தொழில், வணிகம் முதலிய பயனுடைத் தொழில்களை விருத்திசெய்யும் விதங்களையுமே போதித்தல்

வேண்டும். அவ்வாறு போதித்தற்குச் சாதனங்களாயிருக்குமாறு இத்தகைய போதனைகள் நிரம்பிய நூல்களே மிகுதியும் வெளிவரல் வேண்டும். அந்நூல்களை நம்பிள்ளைகள் பயின்று வருவார்களாயின் அறிவிலும், செல்வத்திலும், அழகிய வாழ்க்கையிலும் சிறந்து விளங்குவார்கள். அங்ஙனம் சிறப்புறும் அன்னோரால் நம்நாடு நலம்பெற்றுத் திகழும்.

இந்நோக்கங்களைக்கொண்டே இங்குக்கூறிய போதனைகளுள், தெய்வபக்தி அடியார் பக்தி முதலிய நற்போதனைகள் பொதிந்துள்ள "திருமங்கையாழ்வார்" என்னும் இந்நூலை யாம் வெளியிட்டிருக்கின்றனம். இதில், வைணவப் பெரியாருள் மிக்க மகிமை வாய்ந்தவரும், திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றாகிய சார்ங்கத்தின் அம்சமாக உலகில் உதித்தவரும், தெய்வபக்தியால் உன்னத பதவி பெற்றவருமாகிய, திருமங்கையாழ்வாரின் அற்புதசரிதை இனிய தமிழ் நடையில் சிறுவர் நன்குணர்ந்து கொள்ளுமாறு தெளிவாக எழுதப்பட்டிருத்தலின், இதனைப் படிக்கும் மாணவர்க்கு ஆஸ்திகபுத்தி தெய்வபக்தி முதலிய நல்லொழுக்கங்கள் விருத்தியடையுமென்பது திண்ணம்.

ஆதலின், தமிழபிமானமுள்ள பெரியாரும், வித்தியா இலாகா அதிகாரிகளும் இதனை ஆதரித்து மாணவர்கட்குப் பாடப்புத்தகமாகும்படி செய்து, இத்தகைய பயனுடைய முயற்சிகளில் செலுத்தப்படும் எம்முடைய ஊக்கம் மேன்மேலும் வளர உதவிபுரிவார்களென்றெண்ணுகிறோம்.

இங்ஙனம்,


E. M. G.

MADURA.

# பொருளடக்கம்.


| இயல் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருமங்கை மன்னன் திருவவதாரம் | 1 |
| 2 | குமுதவல்லியின் வரலாறு . | 8 |
| 3 | திருமங்கை மன்னன் திருமணம் ... | 91 |
| 4 | மங்கை மன்னன் சிறையும், திருமால் திருவருளும் | 28 |
| 5 | மங்கை மன்னன் வழிப்பறியும், திருமால்காட்சியும் | 41 |
| 6 | ஆழ்வார் திவ்விய தேசயாத்திரையும் ஞான சம்பந்தரும் ... . . | 52 |
| 7 | அரங்கநாதன் ஆணையும், ஆழ்வார் பொருள் தேடலும் | 60 |
| 8 | தந்திரத்தால் புத்தசிலையை வசப்படுத்தல் | 74 |
| 9 | புத்தசிலையால் பஞுப்பணிபுரிதல் | 85 |
| 10 | ஆழ்வார் யோகநிஷ்டையில் அமர்தல் | 94 |

உ



## நாராயணா.

திருமங் கைமன்னர் திருவவ தாரம்
மருமங் கெல்லாம் மாணவர் கற்றல்
'இளைஞர் பழக்கம் இறுதி வரையும்
கிளைகணு றின்று கண்ணியர் தரு" மென
முன்னோர் புகன்ற முதுமொழி யாங்கே
அன்னோர் கல்வி அடக்கம் பக்தி
ஒழுக்க முதலாம் உயரிய நிலையில்
விழுப்பம் பெற்று மிளிருவ ரென்றே
திருச்செங் கோட்டில் செந்தமிழ் நடாத்தும்
தெருட்சி யார்ந்த சீலர் மாணுஜ
ரெட்டியார் தமிழ் ரட்டியா ரிதனை
அட்ட பாலி னடேரவை யாமெனத்
தெள்ளிய கடையில் இரட்டி ஈந்தனர்
உள்ள படியாம் உணருங் காலை
ஸ்ரீவைஷ் ணவமாம் தெய்வத் தன்மையிற்
சேவைசா திக்கத் தோலோ மாதலால்
என்னே இதனை இயற்கலா சாலையுள்
பொன்னே யாமெனப் போற்றிப்
பாடமா வைத்துப் பயிற்றிடு வாரே

இங்ஙனம்,
நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.

BOARD HIGH SCHO...
22 SEP 1947
CHITTOOR

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# திருமங்கையாழ்வார்

---

## கடவுள் துதி

கைம்மான் மழகளிற்றைக் கடல்கிடந்த கருமணியை
மைம்மான மரகதத்தை மறையுரைத்த திருமாலை
எம்மானை எனக்கென்றும் இனியானைப் பனிகாத்த
அம்மானை யான்கண்ட தணிநீர்த்தென் னரங்கத்தே

---

## முதல் இயல்

### திருமங்கைமன்னன் திருவவதாரம்

இப்பரதகண்டத்தின் தென்பாரிசத்தே விளங்கும், தென்னாடு பண்டைக்காலத்து; அரசர்களால் மூன்று பிரிவினதாய் அமைக்கப்பட்டிருந்தது அவை முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு எனப் பெயர் பெறும் அதில்,

" செந்தமிழ் மொழியைச் செல்வர் கூட்டினை
நந்தமிழ் நூல்கள் நலம்பெற வருளிய

நடுநீர் வையிலெம நவைமூ தாட்டித
தொடுநீர் வரைபபிற சோறுடைத தெனறும
தொலசீர பரவிய சோணாட்டினகண"

நானிலத்தே விட்டப்பட்ட பல மதக்கோட்பா
ட்டங்கிய ஏடுகளில், வைணவ ஏட்டை எதிர்த
தேறச்செய்து அதன மேன்மையை விளக்கிய
தன்மையுடையதும், கங்கையிற புனிதமாயதும்,
பொன்னிநதியெனப பெயரேறறதுமாகிய காவிரி
யானது, வள்ளலகள், ஏறபோாக்குத தன்னிருகை
களாலும மணியும், பொனனும மனமுவநது
வாரி வாரி அவர்கள வெறுக்குமவரையும வரை
யாது ஈவதேபோல, தன அலைகளாகிய கைகளால
பொன், மணி, முதது, வணடல முதலானவை
களை இருகரை மருஙகிலும வீசிச செலலா நிற
கும இவவாறு வணடலும, நீருங கலநது வயல
களுக்குப பாயதலால முறையே நிலவளமும, நீர
வளமும பெறறு அநநாடு எநநாட்டினும முன
னணிக்கூடும் சிறப்பினதாய விளஙகியது

அநநாட்டில நிலததிறகு அழகை உணடு
பணணக்கூடிய நெலலும, கருமபும், முறையே
கருமபும, கமுகுமபோல பருததும உயாநதும
செழிபபுறறு விளஙகா நினறன. இனனும ஆங
காஙகு இடையிடையே காணபபடும பலவகை
மரஙகளமைநத இளமரக்காக்களும, எணடிசை

யும் மணத்தினை வீசும் பலவகைப் பூஞ்சோலைகளும், தாமரைத் தடாகங்களும், குமுதங்கள் நிறைந்த ஓடைகளும், பசும்புற்றரைகளும், பார்ப்போர் கண்களைப் பறிக்கும் தன்மையினவாயும், குயில்கள் கூவுவதும், வண்டுகள் ரீங்காரஞ் செய்வதும், நாகணவாய்ப்புட்கள் நவில்வதும், கேட்போர் மனத்தைத் தன்வயப்படுத்தும் தன்மையினவாயும் விளங்கா நின்றன.

இத்தகைய வளங்களமைந்த சோழமண்டலத்தின் ஒரு பிரிவாய்ச் சிறப்புற விளங்கியது திருவாலி என்னும் ஒரு சிறிய திருநாடு. அதன் தலைநகரமாகத் திகழ்ந்து விளங்கியது திருக்குறையலூர் என்னும் திருப்பதி. அப்பதியில் நான்காம் வருணத்திலே (ஏளாளில்) புகழ்பெற்ற கள்ளர்குலத்துதித்த ஒருவர் ஆலிநாடரென்பப் பெயர்பெற்று அந்நகரை அரசிருக்கையாகக் கொண்டு மனுமுறை வழாது அரசுபுரிந்து வந்தனர். அவர் அஞ்சாநெஞ்சுடன் போர்மேற் சென்று எதிர்த்தோரைவென்று புகழெனும் அணிகலனைப் பூத்திறனும் தன்மையினையுடையோர்.

இவ்வாறு சிறப்புற விளங்கிய நம் ஆலிநாடர்புகழ் சோணாடெங்கும் பரவிற்று. அதனையறிந்த அந்நாட்டின் தலைவனாகிய ஆபயராஜ சோழன் அவரைத் தன் சேனைத் தலைவனுக்க

எண்ணங் கொண்டனன், எண்ணங்கொண்டதும் தூதுவர் மூலமாய் ஆலிநாடர்க்குத் திருமுகமனுப்பினன் தூதுவர் கொணர்ந்த திருமுகமேற்ற ஆலிநாடர் ஆனந்தமெய்தித் தமது சேனையோடு புறப்பட்டு அப்ப ராஜசோழனை அடைந்தனர் அப்பராஜன் ஆலிநாடரை மிக்க அன்போடு வரவேற்று உபசரித்துத் தன் எண்ணத்தை வெளியிட்டான் சோழன் உள்ளக்கருத்தை அறிந்த ஆலிநாடர் அதற்கிசையவே, அவர்க்களவிலாப்பொருளளித்து அவரது நாடாகிய ஆலிநாட்டிற்குக் குறுநில மன்னனாகவும், தன் சேனைக்குத் தலைவனாகவும் அவரை ஏற்படுத்தினன்

ஆலிநாடர் அரசரால் அளிக்கப்பெற்ற இருதொழிலையும் ஏற்றுக் கற்பிற்சிறந்த மனையாளாய வல்லித்திரு என்னும் வனிதையோடு இல்லறத்தை இனிதே நடாத்திவந்தனர் சின்னாட்கள் கழிந்த பின்னர் அன்பர்கள் இதய கமலத்தமர்ந்துள்ள திருமால் அவ்வம்மையார் தம்மை அநுதினம் துதித்து அன்பொடு செய்யும் பூசனைக்கும், பாகவதர்கட்கு அறுசுவையோடு திருவமுதுபடைத்து அன்பொடு ஆதரிக்கும் அருங்குணத்திற்கும் திருவுளமுவந்து அவர் குறையை நீக்கத் தமது பஞ்சாயுதங்களுள் ஒன்றாகிய வில்லின் (சார்ங்கத்தின்) மீது திருவருட் கண்ணை சாத்தியருளினர்.

பரந்தாமன் திருக்குறிப்பின்படியே வில்லும் (சார்ங்கமும்) கலியுகத்தில் மூந்நூற்றுத் தொண்ணூற்றெட்டாவதான நளவருஷத்தில் பூரணமி பொருந்திய வியாழக்கிழமையில், கார்த்திகை மாசத்துக் கிருத்திகை நக்ஷத்திரம் கூடிய சுப தினத்திலே, வைணவம் வளர, பாகவதர்கள் கொண்டாட அவ்வம்மையாருக்குத் திருக்குமாரராய் அவதரித்தது.

கிருதயுகத்தில் கர்த்தமனென்னும் பிராமணனாகவும், திரேதாயுகத்தில் உபரிசரவசு என்னும் க்ஷத்திரியனாகவும், துவாபரயுகத்தில் சங்கபாலன் என்னும் வைசியனாகவும் தோன்றி உலகத்தை நல்வழிப்படுத்திப் பாதுகாத்த பரந்தாமனே இக்கலியுகத்து மண்ணுலகத்து மன்னுயிர்களைச் சன்மார்க்கத்தில் உய்த்தற்கு நான்காம் வருணத்தில் உதித்தாரென்று இவர் திருவவதாரத்தைப்பற்றி அநேக நூல்கள் கூறா நிற்கும்.

பிறந்த அக்குழந்தையின் திருமேனி மூலமூர்த்திபோல நீல நிறமுடையதாய்த் திகழ்ந்து விளங்கியது. ஆதலால் பெற்றோர்கள் அக்குழவிக்கு நீலன் என்ற திருநாமமிட்டு அதை மிக்க அன்போடு சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தனர்.

இங்ஙனம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சிறப்புற வளர்ந்த நீலனார் "எக

கலையும் கற்றுணர்ந்தார் ஏரேட்டாண்டெல்லையில் ”
என்றபடி தம் இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டிய எல்லா நூல்களையும் கசடறக்கற்று வல்லவராய் விளங்கினார், அன்றியும், தமது தொழிற்கும், ஜாதிக்கும் இன்றியமையாதனவாகிய எல்லாவித ஆயுதப் பயிற்சிகளிலும் தேர்ந்து வல்லவராயினார் சின்னாட்களில் இவரது தந்தையாகிய ஆலிநாடர் மண்ணுலகை நீத்துப் பரமபத மடைந்தனர் தந்தையார் பரமபதமடைந்ததும் நீலனார்,

“ மகன் றந்தைக் காற்று முதவி இவன் றந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல் ”

என்றபடி அரசனிடம் தானும் சேனைத்தலைமை வகித்துத் தந்தையினும் பதின்மடங்கு பேரும், புகழும், பெருமையு மடைந்தனர்

இஃதன்றித் தம் கொற்றவர் பகைவரோடு கடும்போர் செய்யநேருங் காலங்களில் நீலனார் தமது வீரத்தினால் படைகளோடு முற்சென்று பராக்கிரமத்தாற் பகையைவென்று பரகாலர் என்று பெயர்பெற்றுப் பல முறை வாகை சூடினார்

பரகாலர் சேனைத்தலைவராய் அமர்ந்த சின்னாட்களுள், சோழமன்னன், சிற்றரசர்கள் பலரை வென்று அவர்களிடம் திறைகொண்டு திரண்ட

செல்வந்தனும், அரசர்க்கரசனும் விளங்கினான்.

இவ்வாறு சோழன் பெரும், புகழும், தலைமையும் பெறக் காரணமாக விளங்கினவர் நீலனெனும் அவனது சேனைத் தலைவரேயாவர். தனக்கு மேன்மையை யளித்த தன் சேனைத்தலைவராகிய நீலனது கல்வி, குணம், வீரம், புகழ் முதலியவைகளைத் தன்னிரு கண்களுங் களிப்படையக் கண்ட காவலனாகிய சோழன்,

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்ற மறைமொழியின் கருத்தைக் கருத்துட் கொண்டு, தமக்குச்செய்த பேருபகாரத்திற்காக அவரிடம் அன்பு பூண்டு, அவர் தந்தையால் அளிக்கப்பெற்ற ஆலிநாட்டிற்குத் தலைவனாக விளங்குவதோடு, அதனினும் பெரிய நாடாகிய மங்கை நாட்டிற்கு மாநிலம்புகழ முடிசூட்டி மன்னனாக்கினான்.

இங்ஙனம் ஆலிநாட்டிற் கதிபனும் மங்கை நாட்டிற்கு மன்னனுமாய் விளங்கிய பரகாலர், காவலர்க்குரியதாகிய கலைகளையும், ஐயந்திரிபறக் கற்றவராதலால், மங்கை நாட்டை மனுமுறை வழாது அரசுபுரிந்து வந்தனர், இஃதன்றிச் சோழமன்னன்

னுக்கு அவனது கண்ணின் கருமணிபோல் உற்ற விடத்து உதவிபுரிந்து வந்தனர். இவர் ஆலிநாட்டிற்குத் தலைவராய் விளங்கியபடியால் ஆலிநாடரெனவும், திருமங்கை என்னும் நாட்டிற்குத் தலைவராய் விளங்கியபடியால் திருமங்கைமன்னன் எனவும் பெயரேற்றனர்.

---

## இரண்டாவது இயல்

### குமுதவல்லியின் வரலாறு

இங்ஙனம் திருமங்கைமன்னன் அரசாண்டு வருங்காலத்தில் அந்நாட்டில் திருநாங்கூரைச் சார்ந்த திருவெள்ளக்குளம் என்னும் திருப்பதியில் வைத்தியநூலிலே தேர்ச்சிபெற்ற வைணவரொருவர் வசித்து வந்தார். அவர் பெருஞ்செல்வம் படைத்தவர், பரந்தாமனது பாதாரவிந்தங்களை மறவா மனமுடையவர், பாகவதர்களை எதிர்கொண்டழைத்து அன்போடு உபசரித்துத் திருவமுது படைத்து ஆனந்திக்கும் அருங்குணமுடையவர். இவருக்குக் கல்விச்செல்வம், பொருட்செல்வம், கடவுட் பக்தி, அடியார் பக்தி முதலிய நற்குணங்களெல்லாம் நிறைந்திருந்தன. ஆனால் மகப்பேறில்லாத குறையொன்று அவர் மனத்தை நெடுநாளாய் வருத்தியது.

அஙஙனமே கறபிற சிறநத அவா மனையா ளும மகபபேறிலலாக குறையால மனமிகநொநது நாளுககு நாள மெலிநது வரலாயினள அதனை யறிநத மருததுவ வைணவா தன மனைவியை நோககி, "மஙகாய! உன ஆகம நாளுககு நாள மெலிநதுவரக காரணமெனனை? அதை எனககுத தெளிவாய எடுததுரைபபாய" எனறனா

காதலன மொழிநத வாாததைகளைக காதி லேறற காதலி, "என ஆருயிாத தலைவ! நாம நல வினைபபயனால அளவிலாச செலவம படைததும, பாகவதாகளை எதிாகொணடழைதது, உபசரிககுந தன்மையை அடைநதிருநதும நமககுப பின நம குலததை விளக்கவும், பாகவதாகளை எதிாகொண டழைதது உபசரிககவும, ஒருவரும இலலாமல போயவிடுவாாகள போலிருககிறதே எனற குறை மடடும எனமனதில நெடுநாளாய இருநதுகொண டிருககிறது இதைத தவிர வேறொனறு மிலலை" எனக கூறினள

வைணவா "என ஆருயிாத தலைவி, இதறகு வருநதுவது அறியாமையேயாம இநநிலவுல கில அளவிலாச செலவம படைதத அனேகா மகபபேறிலலாது வருநதுவதையும, அநேக வறியவாகள அநேக குழநதைகளைப பெறறு உணண உணவும, உடுகக உடையுமினறி வருநது

வதையும், நாம் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? இது அவரவர் விதியின்படி அமைவது

'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்'

என்ற நீதி வாக்கியத்தை நீ அறிந்திருந்தும் இதற்காகக் கவலைகொள்ளுதல் சரியன்று பகவான் அருள்புரியும் பாண்டவசகாயன் அருள் இருப்பின் அது தானே வந்து கைகூடும்" எனப் பல விதமாய்த் தேறுதல்களைக் கூறித் தன் மனைவியின் மனத்தைத் தேற்றினார் அப்பால் மனைவி ஒருவாறு தேறி, தன் தொழிலில் யாதொரு குறைவுமின்றிச் செவ்வனே நாடோறும் நடந்து வந்தாள்

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் மருத்துவ வைணவர், விடியற் காலையில் எழுந்து தன்னகப் புறத்தே உள்ள தாமரைத் தடாகத்தில் நீராடித் திருமண் காப்பணிந்து, ஜபதபாதிகளை முடித்துக் கொண்டு, வீடு நோக்கிச் சென்றனர், செல்லும் வழியில் மாதவ ஸரஸை ஒத்ததோர் பொய்கையைக் கண்டனர் அதன் நாற்கரை மருங்கும் பல வித மலர்ச்செடிகள் பன்னிற மலர்களுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தன அப்பொய்கையின்

படிககடடுகள பளிஙகுக கறகளால அமைததுப
பலவகை வேலைபபாடுகளுடன விளஙகின அதன
உடபுறததுளள நீா சானறோா மனமேபோல
தெளிநது விளஙகியது அதில குளததிறகு
அழகை உணடுபணணககூடிய தாமரைமலாகள
பாாபபோா முகததைப பழிககுந தனமையனவா
யிருநதன அமமலாகளதோறும அனனபபறவை
கள தஙகள பெடைகளுடன கூடிக குலாவிக
கொணடிருநதன

இததகைய பொயகையின உடபுறததே என
றும காணபபெறாததும, கணகளைப பறிககுந
தனமையதுமாகிய ஓா ஒளி அவவைணவப பிரா
மணருககுத தோனறிறறு அதைககணட அவா
“ எனறும தோனறாத ஒளி இனறு இபபொயகை
யில தோனறுகினறது நீா நிறைநதுளள தடா
கததில ஒளி எஙஙனம தோனறும ? நெருபபின
சுவாலை யெனறோ புகையிலலையே ! சூரியனென
றோ இருசூரியா ஒருஙகே உதிககமாடடாாகளே !
சநதிரனெனபதறகு மிலலையே ! இது பகறகால
மாயிறறே ! ஆதலால இது யாதென நாம கண
டறியவேணடும ” என எணணமுடையவராய,
அபபொயகையின கரையை அடைநதனா

அஙகு திருமகளேபோல அழகுவாயநத ஒரு
பெணமகவு தனிததுக குமுதமலா கொயதுகொண
டிருபபதைக கணடனா கணடதும,

"வருந்துமோ மிடியன் சேம
வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துணை யிழந்தோன் விண்ணோர்
அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற்
பகமெதிர் கண்டாற் போலும்
சரிந்தபற் றின்னமெய் யாசான்
தனையெதிர் கண்டாற் போலும்"

அவர், அக்குழந்தையின் ஒளியிலும், வடிவத்திலும், அழகிலும் ஈடுபட்டு அளவிலா ஆனந்த மெய்தினர்.

பின் சிறிது நேரத்தில் இவள் திருமா மகளோ? பூமிதேவியோ? அல்லது நீரரமகளோ? என ஐயமுற்று ஒருவாறு தேறி அப்பெண்ணின் அண்மையில் அவர் வந்தனர், வந்ததும் அப்பெண்ணை நோக்கி, "பேதாய்! நீ யார்? இத்தாமரைத் தடாகத்தில் தனித்தே யிருக்கக் காரணமென்னை? அதனை எனக்குத் தெளிவாய் எடுத்துரைப்பாய்" என்றனர்.

அம்மங்கையர்க்கரசி அவரை நோக்கி, "பெரியோய்! நான் அமரர்குலத்துதித்த அரிவை என் திருநாமம் சுமங்கலை நான் முன்னொரு காலத்து இம்மண்ணுலக வளங்களைக் கண்டு மகிழ்வுற வேண்டி என் பாங்கியரோடு இமய

மலையையடைந்தேன், அங்குள்ள எல்லா வளங்களையும் கண்டு களித்தேன், பின்னர் அதன் சாரலுக்குச் சென்று உல்லாசமாய் உலாவிக்கொண்டிருந்தேன், அங்கு மஹரிஷிகள் வசிக்கும் சித்தாசிரமம் என் கண்ணெதிரிற்பட்டது உடனே அங்கு வசிக்கும் மஹரிஷிகளைக் கண்டு வணங்கி அருள்பெற எண்ணங்கொண்டு நான் ஆண்டடைந்தேன்

“அங்கே அப்பொழுது கபிலமஹா முனிவரிடம் மற்றைய முனிவர்கள் ஞான நூல்களையும், உண்மைப் பொருளையும் ஆராய்ந்தறிந்துகொண்டிருந்தனர் அவர்களுள் ஒருவர் முற்பிறப்பின் வினையால் குரூபியா யிருக்கக்கண்ட நான், அவரைப் பரிகசித்துச் சிரித்தேன் அதனை யறிந்த கபில மஹாமுனிவர் என்மீது சினங்கொண்டு என்னை நோக்கி, ‘ஓ! பேதாய்! நீ அழகிற் சிறந்த அமரமங்கையாயும், திரவியத்திற் சிறந்த தேவமங்கையாயும், வடிவிற் சிறந்த வானமங்கையாயும் இருந்ததாலன்றோ செருக்கடைந்து ரிஷிகளின் மகிமையை அறியாது பரிகசித்துச் சிரித்தாய் ஆதலால் நீ மண்ணுலகத்தில் மானுட வடிவெடுத்துத் தாழ்ந்த குலத்திற்பிறந்த ஒருவனை மணந்து கொள்வாயாக’ என்று கடுஞ் சாபமிட்டனர்

'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது'

"ஆகலான், அவ்வார்த்தைகள் என் செவியிற் புகவே நடுநடுங்கி முனிவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, 'அருந்தவமுனிவோய்! அறிவிற் சிறியோர் அறியா திழைத்த பிழைகளை அறிவிற் பெரியோர் பொறுத்து அருள்புரிவது கடனாதலின், அரிவையாகிய யான் அறியாதிழைத்த இச்சிறு பிழையைப் பொறுத்து அருள் செய்வீராக' என, வேண்டி நின்றேன்!

"முனிவர், சிறிது நேரத்தில் முனிவு நீங்கி, என்னிலைமை கண்டிரங்கி, 'மங்காய்! என் சாபம் வீணாகாது ஆயினும், நீ மண்ணுலகையடைந்து, சோழநாட்டிலே திருக்குறையலூரிலே அவதரித்த பரகாலரைப் பதியாகக்கொண்டு, அவரது குணம், கொள்கை முதலியவைகளை யெல்லாம் மேன்மை பெறச்செய்து வைணவராக்குவாய். அங்ஙனமாக்கிலை அவர் மூலமாய் நீ நற்கதியடைவாய். அவர் மானுட வடிவினரென்றும் தாழ்ந்த குலத்துதித்தவரென்றும் நீ நினையாதே. அவர் ஆலிநாட்டிற் கதிபராயும், மங்கை நாட்டிற்கு மன்னராயும் விளங்குகின்றனர். இஃதன்றி அவர் சாமானிய மனிதரல்லர், திருமாலின் பஞ்சாயுதங்களுள் ஒன்றாகிய வில்லின் (சார்ங்கத்தின்) அம்சத்தினர்,

உலகிருள்போக்க அவதரித்த உத்தமர் நீ அன்னோர்க்கு உகந்த மனையாளாகி, அவரை வைணவ பக்தராகச்செய்து, பக்தர்கள் மெச்ச, நாடோறும் பகவானைத் துதித்துச் சுகமாயிருப்பாயாக' என்று அருளினார்.

“இங்ஙனம் முனிவரால் சாபமொழியைப் பெற்ற நான் இன்று தோழிகளாகிய தேவ மகளிர்கள் பலருடன் இத்தாமரைத் தடாகத்தில் நீர் விளையாடி மனமுவந்து குமுதமலர் கொய்து கொண்டிருந்தேன். தோழிகள் இவ்விடத்துத் தனியே என்னைவிட்டுப் பிரிந்து சென்றனர். ‘பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்’ என்ற பழமொழியின்படி இதுபோழ்து முனிவருடைய சாபமும் வந்தடுத்தது. ஆதலால் யான் இம்மானுட வடிவந்தாங்கி ஈண்டு தனித்திருக்கின்றேன், மீண்டும் விண்ணுலகேகி விண்ணவரோடு கலந்து கொள்ளும் விதமறிகிலேன்.

‘எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்' என்றும்,

‘வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை'

என்றும், ஆன்றோர் கூறிய மறைமொழியை மறந்து, அச்சமின்றிப் பெரியோரை அவமதித்த

தனுல விளைநத பயனை இதுபோழுது அநுபவிக கினறேன" என்று கூறினுள்

இவவாறு தன வரலாற்றினை ஆதியோடநத மாகககூறிய பெண்ணின மொழியைக கேட்ட நம மருததுவ வைணவா யாதொன்றுங கூற நாவெழாதவராய "என்னே! விதியின்பயன்" என, மனததுட்கொண்டு அசைவற்று நின்றனா சிறிது நேரம் தாழநதபின மீண்டும அப்பெண்மகவு அந தணரை நோககி, "அநதணரே! 'கண்ணைக கெடுதத தெய்வம கோலைக கொடுத்தது' என்ற பழ மொழியின்படி யான யாருமற்ற பாவியாயத தவித துக கலஙகி நிற்கும இவவேளையிற்றுயா பாநதா மானே என்னிலைமை கண்டிரஙகி 'திககற்றவாக குத தெயவமேதுணை' என்ற ஆன்றோா வாககியம அவலமாகாவண்ணம பரம பாகவதராகிய தங கள் ரணடடையச செயதனா் போலும அடியா ளாகிய நான தஙகளைத தவிர வேறொருவரையுங கண்டு இதுவரையும காணபபெற்றிலேன, ஆத லால தஙகளையே தஞ்சமாக் அடைகின்றேன அடைககலம புகுநதோரை ஆதரிப்பது பெரி யோா கடமையன்றோ? அஃதன்றித தனனுயிா போல மன்னுயிரை நினைததுப் பசுவின கன்றினை பொருட்டுத தன மகனையே தோக்காலிலிட்ட மனு நீதிச சோழனும, அடைககலம புகுநத புறவின

பொருட்டுத் தன் தசையை அரிந்தீந்த சிபிச் சக்கர
வர்த்தியும் அவதரித்த நாடன்றோ இது? ஆகை
யால் அத்தகைய நாட்டில் அவதரித்த தாங்கள்
அடியாளாகிய என்னைத் தமது இல்லத்திற்கு
அழைத்துச்சென்று ஆதரித்து அருள்புரிய
வேண்டுகின்றேன்" என்று புலம்பி அவ்வைண
வருடைய பாதங்களைப் பரிவொடு பற்றி வணங்கி

இங்ஙனம் ஒரு பெண் பரிதபித்துப் புலம்பு
வதைக் காணின் யார் தான் மனங்கசியார்? பெண்
ணென்ற பேயுமிரங்கு மன்றோ? பெண்ணின்
பரிதாபத்தைக் கண்டு பேயும் இரங்குமெனில் நம்
வைணவப் பிராமணருடைய மனம் அடைந்த
நிலைமையைக் கூறவும் வேண்டுமோ? மேலும்
பிள்ளைப் பேறின்றிப் பன்னாள் வருந்திய அவர்
மனம் சந்திரனைக்கண்ட சந்திரகாந்தக் கற்கள்
போலாயது ஆகவே "அழகிலும், குணத்தி
லும் சிறந்த இம்மங்கையை யுடைய நாம் முற்
பிறப்பில் எத்தவந்தாம் புரிந்தேமோ? நம்முடைய
குறையை யொழிக்க மணவாள நாராயணன் தான்
மனமுவந்து இம்மகவை அளித்தாற்போலும்
இங்ஙனம் பக்தர்க்கிரங்கி அருள்புரியும் பரந்தா
மன் திருவருளை என்னென்று புகழ்வேன்"
என்று, அவர்தம் மனதில் நினைத்து மதுசூதனன்

பரனைப் மனமாறத் துதித்தனர். பின்னர் தம் திருக் கண்களினின்றும் சொரியும் ஆனந்த அருவி மார்பெங்கும் நிறைய, உரோமம் சிலிர்க்க, உடல் புளகாங்கிதங்கொள்ள, ஆனந்தமென்னும் அளப்பருங் கடலில் ஆழ்ந்தினார், சிறிது நேரம் தாழ்த்த பின் கிடைத்தற்கரிய அவ்வணங்கை அன்போடு தமதில்லத்திற்கு அழைத்தேகினார்.

அமிழ்தினும் இனிய மொழியினையுடைய அரிவையோடு இல்லையடைந்த அந்தணர் இல்லக் கிழத்தியை நோக்கித் தமக்கு நிலங்கடந்த நெடுமுடி யண்ணலின் திருவருளால் திருமகளேபோல அழகிற் சிறந்த அப்பெண் மகவு கிடைத்த வரலாற்றினை ஆதியோடந்தமாக எடுத்துக்கூறினார். தன் நாயகன் கூறிய வாசகத்தைக்கேட்ட கற்பிற் சிறந்த அந்த உத்தமி, தரித்திரத்தினால் வருந்திய ஒருத்தி ஒரு பொருட்குவியல் பெற்றதைப்போலவும், கண்ணில்லாமல் வருந்திய ஒருத்தி கண்ணைப் பெற்றதைப் போலவும் களிகூர்ந்தனள்.

பின் தன் நாயகன் அடிபணிந்து அக்குழவியைத் தன்னிரு கரங்களாலும்,

" வாங்கினள் தன்மார்பினமிசை வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை யொத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதும்பப்போ
டேங்கினள் உயிர்த்தனள் இதென்னென்தென லாமே"

என்றபடி அக்குழவியை வாங்கி மார்போடு அணைத்து, சிரசிற்றாங்கி, கண்களில் ஒற்றிக் கொண்டு, உச்சிமோந்து முத்தமிட்டு, ஆனந்த மடைந்தனள் அக்குழவி குமுதமலர் கொய்து நின்ற காரணத்தால் தாய்த்தந்தையர் இருவரும் அக்குழவிக்குக் குமுதவல்லி என்று திருநாம மிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண் ணமுமாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந் தனர்

## மூன்றாவது இயல்

## திருமங்கை மன்னன் திருமணம்

இங்ஙனம் இருமுது குரவராலும் வளர்க்கப்பெற்ற குமுதவல்லி பேதைப்பருவம் நீங்கிப் பெதும்பைப் பருவம் அடைந்தனள், மேலும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனனும் நால்வகைக் குணங்கட்கும், பெற்றோர் பேணல், பெரியோரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தல், பெருமானடிப்பணிதல் முதலிய நற்குணங்கட்கும், இருப்பிடமாய்ச் சிறந்து விளங்கினள்

இவள் நாடோறும் பரந்தாமன் அடிப்பணியும் பாகவதர்களைக் காணின்,

“கொண்டுவந்து மனைபுகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிகாறு வித்துவிலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டநாயகர் தொண்டரிச்சையில் அமுதுசெய்ய வளித்து”

அவர்கள் மனங்கோணாது உபசரித்தனுப்புவள்.

இவ்வாறு குமுதவல்லி நாடோறும் செய்து வரும் ஒவ்வொருகாரியங்களையும் கண்ணுரக்கண்டு, பெற்றோர்கள் மனங்களிகூர்ந்தனர் அவளும் வயதேறவேற நற்குணங்களிலும் உயர்ந்து மங்கைப்பருவமடைந்து சிறப்புற விளங்கினள் தன் மகள் மங்கைப்பருவமடையவே தாய்தந்தையரிருவரும் மணவினை முடிக்க எண்ணங்கொண்டு “மகா குணவதியான இவ்வணங்கிற்கு, ஏற்ற கணவன் உலகத்தில் உள்ளனோ? நற்குணங்களுக்கு இருப்பிடமாகிய இந்நங்கை நல்ல நாயகனை அடைந்தாலன்றோ சிறப்புற்று விளங்குவள்? இன்றேல், மணமிலா மலரைப்போலாவாளே!” என்று, பெருங்கவலை கொண்டவராய்ப் பார்த்தசாரதியின் பாதாரவிந்தங்களை மனதிற் பதித்துத் தன் மகளுக்கேற்ற மணாளனைத் தந்தருளுமாறு துதித்து வரலாயினர்.

திருநாங்கூரைச்சார்ந்த திருவெள்ளக்குளம் என்னும் திருப்பதியில் குமுதவல்லி இவ்வாறு வளர்ந்துவர, அவள் குணதிசயங்களும் குன்றின்

மேலிட்ட விளககேபோல எணடிசையும பரவலா யின இதைத தமது சாரணா மூலமாகவறிநத நீலனா அவளைக கணடு மகிழ எணணஙகொண டனா எணணஙகொணட மனனன தமது அமைசசாகளை அழைததுத தன கருததைத தெரி விதது, " நானபோய அவவணஙகைக கணடு திருமபி வரும வரையும நீஙகள இவவிராஜயாதி காரியஙகளை யாதொரு குறைவுமினறி நடததி வரு வீரகளாக" எனக கடடளையிடடான அமைசசா கள அரசன கடடளைபபடி அரசை நடததிவந தனா

மறுநாள மஙகை மனனன காவலாளா புடை சூழநத திருவெளளககுளம எனனும திருபபதியை நோககிப புறபபடடனா வெயிலின வெபபம அதிகரிககவே அநநகரபபுறததேயுளள ஒரு பெருஞ சோலையில தஙகினா, பின உணவருநதி உணட இளைபபை நீககிககொளளச சிறிது போழது படுததுறஙகினா, வெயிலின வெபபம சிறிது நீஙகவே, அமமஙகையாக கரசியாா வளாநதுவரும பிராமணா இலலம இருககுமிடம தமது தாதுவராலறிநது, அவரகததை யடைந தனா

மஙகைமனனன தமமனைககு வருதலை யறிநததலைவணவா மனனனை எதிாகொணடு அழை-

தந்து உபசரித்து ஆசனமளித்து அமரச்செய்தனர். பின்னர் அவ்விருவரும் சிறிது நேரம் ஒருவர்க்கொருவர் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல்' அம்மாது சிரோமணியும் தற்செயலாய் அங்கு வந்தனள். பரகாலர் அச்சுந்தரவதனியைக் கண்டவுடன், "இந்தக்கன்னிகை இல்லக்கிழத்திக்குரிய சகல இலட்சணங்களும் வாய்ந்தவளாய் இருக்கின்றாள். இவளை நாம் மணந்துகொண்டால், இவளுடைய துணையால் இல்லறம் இனிது நடைபெறும். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்று பெரியோர் கூறியுள்ளபடியால் நாம் நல்ல உத்தமியை நாயகியாக அடைந்து இல்லறம் நடத்தவேண்டியது நமது கடமையேயாம். மேலும் இவள் சிறந்த தெய்வபத்தி யுடையவளாயும் பொறுமை யுடையவளாயும் கணவனை ஆதரிக்குங்குண முடையவளாகவும் காணப்படுகிறாள். இப்படிப்பட்ட அணங்கு கிடைப்பதரிது. ஆதலின் நான் இவளை மணந்துகொள்வதற்கேற்ற வழியைத் தேடுகிறேன்" என்றெண்ணி மகிழ்ந்தார்.

பின் அந்த அந்தணரை நோக்கி "மறைவலீர்! தங்களகத்தில் அந்தர மகளேபோல அழகு வாய்ந்து விளங்கும் இம்மங்கையின் குணங்களை

மா நிலததோா புகழ, நான என இருசெவிகளும குளிாசசிபபடடப பனமுறை கேளவிபபடடேன ஆதலால அநதஙகைப மஙகையைக காணவேணடு மெனனுமவா என மனததுணடாயது கடவு ளருளும கைகூடியதால யானும ஈணடடைநது, இமமஙகையையும பாாககும பாககியமபெறறுப பெருமகிழவடைநதேன இமமஙகையைக கண ணுறறதுமுதல என மனதில ஓா எணணம உதித துளது அவவெணணததை முறறுவிககத தமமா லாகுமேயனறி வேறு யாவராலும இயலாது தேவாீா அடியேன எணணததை நிறைவேறறு வீராகில பெரும, புகழும அடைவீாகள

‘ காலததி னுறசெயத நனறி சிறிதெனினு
ஞாலததின மாணப பெரிது ’

ஆகலான நானும எனறும மறவாது தஙகளை மனமாற வாழததுவேன ” எனககூறினா

மனனனமொழிநத மொழிகளைககேடடமறை வலோா “ அவனியில யாரும அரசாககு அநத ணாகளாவாம அருஙகாரியமுமம ஒனறுணடோ ? அஙஙனம எனனாலாகும காரியம ஏதாவதொன றிருபபின அககாரியததை முடிததுத தருவதில யாதொரு தடையுமினறு அதனைச சிறிதேனும மனதிறகொளளாது வெளியிடுவீராக !” எனறனா

மனனன அதுகேடடு மனமுவநது, “ அநத ணீா ! தமதகததே அழகுற விளஙகும மஙகையை

மணந்து மனையறம்புரிய வேண்டுமென்ற மன விருப்பமே யன்றி வேறன்று ஆதலால் தாங்கள் தயைகூர்ந்து இக்கன்னிகையைக் களிப்புடனீந்து அருள்புரிவீராக” எனக்கூறி, தாம் கொண்டு வந்த பொன், மணி, முத்து, ஆடை, ஆபரணம் முதலியவைகளைப் பாகவதராகிய அந்தணரிடம் கொடுத்தார்.

மன்னன் கொடுத்த வரிசைகளைப் பெற்ற வேதியர் அவருடைய எண்ணத்திற் கிசைந்தனர். பின் எண்ணத்தைத் அருமருந்தன்ன அரிவையிருக்கும் அந்தப்புரஞ் சென்று அவளிடம் வெளியிட்டார்.

தந்தையார் கூறிய மொழியைக்கேட்ட தன்யை பாகவதராகிய பார்ப்பனரைநோக்கி “பிதாவே! ‘தந்தைசொல் மிக்க மந்திரமில்லை’ என்பது நீதி வாக்கியமன்றோ? அவ்வாக்கியத்தை முடியின்மேற் கொண்டு இராமபிரான் முதலானோர் காடுசென்று, மனைவியையும் பிரிந்து அநேக கஷ்டங்களை அநுபவித்திருக்கப் பேதையேனுகிய யான் தந்தையாகிய தங்களது வார்த்தையைத்தட்டி நடப்பேனோ?

‘ தாதை யேவலின் மாதுடன் ஏகிக்
காதலி னோக்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பதை
நீயறி கிலையோ நெடுமொழி யன்றோ? ’

ஆயினும் அடியாளாகிய யான் அநேக நாளாய் என் அகத்திற் கொண்டுள்ள எண்ணம் ஒன்றுளது. அஃது, ஸ்ரீ வைஷ்ணவருக்கு இன்றியமையாதன வாகிய தப்த சக்கராங்கநம், திவ்யோர்த்துவ புண்டரம் முதலிய பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று அரவணையில் அறிதுயில்கொள்ளும் அரங்கநாதன் திருவடிகளை அநுதினமும் அகத்துட் கொண்டொழுகும் அடியவரை மணக்க வேண்டுமென்பதாம். ஏனெனில்,

‘ பாதியர் யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாம் அரவணையாம் என்பா ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தால் மிக்கோ ரேனுஞ்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றார்தாம் புலையர் தாமே ’

என ஆன்றோர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஆதலால் என் எண்ணப்படி இம்மன்னர் நடந்து கொள்ள இசைவராயின் அவரை யான் மணந்து கொள்ள யாதொரு தடையுமின்று. பேதையேன் கூறிய இம்மொழி பெரியோராகிய தங்கட்குக் கடுமொழியாயிருப்பின் பொறுத்து அருள்செய்ய வேண்டுகிறேன் ” என மறுமொழி பகர்ந்தனள்

இங்ஙனம் குழலினுமினிய குரலுடன் கூறிய மங்கையின் மொழியைக்கேட்ட வைணவர், உள்ளங்குளிர்ந்து உவகை பூத்தனர், பின் அந்தப் புரத்தை விட்டகன்று, பரகாலரை யடைந்து, தன்பார்வையின் உள்க் கருத்தைப் பரிவுடன் பகர்ந்தனர்

பரகாலர் அப்பார்வையின் பகவத் பக்தியைக் கண்டு, அதிசயித்து "அவ்வெண்ணப்படி நான் திரும்புகிறேன்" என்று கூறி அந்தணரிடம் அனுமதிபெற்று, திருநரையூரென்னும் திருப்பதியை யடைந்து அப்பதியில் எழுந்தருளியுள்ள நம்பெருமான் கோயிலை நண்ணி, நாவாரத் துதித்து, வணங்கினார், சிரமேற்குவித்த கையினையுடையவராய், "சுவாமி! தாங்கள் ஏழைகட்கிரங்கி ஏற்றதையீயும் பரமாசிரியராதலான் தங்களையே யான் தஞ்சமாக வந்தடைந்தேன் எனக்குப் பஞ்சஸம்ஸ்கார பூர்வமாக உபதேசஞ்செய்து அடியேனைப் புனிதனாக்கி அருளல்வேண்டும் இவ்வளவு காலம் நான் மதியிலாதவனாய்த் தங்களை மதியாது என் வாணாளை வீணாளாக்கக் கழித்தேன் இதுபோழ்து தங்கள் பக்தரில் ஒருவராய்த்திகழும் குமுதவல்லி யென்னுங் குணவதியால் தங்கள் கல்யாண குணங்களைக் காதாரக்கேட்டு நற்குணமடைந்தேன் ஆதலால் என்னைத் தங்கள் அடியவனாக்கக்கொண்டு காத்

தருளல வேணடும" எனப பிராாததிததுத் தன முடிபடிமீதுபட வணஙகி நினறா

பகதாகளிரஙகி அருளபுரியும பரநதாமனும பரகாலாகளிரஙகி அருளசுரநது தமது சினனங களாகிய சஙகுசககரஙகளை அவரது திருததோள களிற பொறிதது, திருமநதிரததை உபதேசித தனா திருமஙகைமனனன திருவிலசசினையும திருமணகாபபும திருமேனியில தரிததுககொணடு தமககுப பரமாசாரியராய விளஙகிய நமபெருமா ளைப பலவாறு துதிதது வணஙகினா, "எமபெரு மான திருவருளால எனெணணமும ஒருவாறு முடிவுறறது" என ஆடிபபாடினா, பின பெருமா னிடம விடைபெறறு வைணவா இலலததை நோககி இனிதே நடநது சென்றனா

வைணவச சினனஙகளுடன இலலமவநத திருமஙகைமனனனைக கணட குமுதவலலி, முனி வா முனனா அருளியவாறு நமது எணணமும ஒருவாறு முடிவுறும என உவபபடைநதனள, பினபகதராயத திகழும பரகாலனை நோககி, "அரசே! இனி உமமை மணகக யாதொரு தடையுமினறு ஆயினும, தேவரீரிடமிருநதுஒரு வாககுறுதி பெற வேணடியதா யிருககிறது அதா வது, இனறு முதல ஓராணடளவும நாடோறும ஆயிரதசெடடு ஸ்ரீ வைஷணவாகளுககு அமுது

படைத்து, அவர்களுடைய திருவடி தீர்த்தத்தையும், போனகம் செய்த சேடத்தையும் உட்கொள்ள வேண்டும் என்பதாம் இங்ஙனம் தாங்கள் செய்வதாய் ஒப்புக்கொள்ளின் தங்களை விவாகஞ்செய்து கொள்ள யாதொரு தடையுமின்று” எனக்கூறினள்

அன்பு, அழகு, குணம், பகவத் பக்தி முதலான நற்குணங்களமைந்த கற்பிற் கரசியாகிய குமுதவல்லி கூறிய மொழிகளைக்கேட்ட நீலனார் அவ்வரிய விரதத்தையும் செய்து முடித்தற்குடன்பட்டனர் குமுதவல்லியும் தான் கொண்ட விரதம் அன்றே பலித்ததெனக் களிப்படைந்தனள் அதன் பின் பரம பாகவதராகிய மருத்துவப் பிராமணர் நல்ல நாளில் சுபமுகூர்த்தத்திலே தம் குலம் விளக்க வந்த குமுதவல்லிக்கும், மங்கை மன்னனுக்கும், பல்லோர் புகழப் பாகவதர்கள் கொண்டாட மிக்க சிறப்புடன் திருமணம் செய்து முடித்தனர்

## நான்காவது இயல்

### மங்கை மன்னன் சிறையும், திருமால் திருவருளும்

திருமங்கை மன்னன் திருமணம் முடிந்ததும் குமுதவல்லியுடன் தமது நகர் சென்று இல்லறத்தி

விருந்து, தென் புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் முதலிய நால்வகை யிடத்தினையும் இனிதே பாதுகாத்து வந்தனர். மேலும், இல்லாளின் விருப்பப்படி நாடோறும் ஆயிரத்தெட்டு பாகவதர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்து அவர்கட்கு அறுசுவையோடு கூடிய நால்வகை உணவுகளை அளித்துக் களித்து வந்தனர். இங்ஙனம் பாகவதர்கட்கு அமுது படைத்து உபசரித்து வந்ததன் காரணமாக அவர் செல்வமும் நாளடைவில் அவரைவிட்டுச் செல்லலாயின. செல்லவே, அவர் சென்னி நாட்டுக்குச் சேர்ப்பிக்க வேண்டிய இறைப்பொருள் சேர்ப்பிக்க முடியாமல் தடைபட்டது. ஆயினும், தாம் கைக்கொண்டு நாடோறும் பாகவதர்கட்கு அமுது படைத்துவரும் அவ்வரிய விரதமோ சிறிதேனும் தடைபடவில்லை.

மங்கைமன்னன் இவ்வாறு தனக்களிக்க வேண்டிய இறைப்பொருளை ஈயாது பாகவதர்கட்குப் பலவிதமாகப் பணவுதவி புரிதலை யறிந்த சோழன், மிக்க கோபங்கொண்டு தூதுவரை அழைத்து, “ஓ! தூதுவர்களே! நீங்கள் இப்போதே மங்கை நாடடைந்து நீலனார் நமக்குத் தரவேண்டிய இறைப்பொருளில் இம்மியும் விடாது வாங்கிவாருங்கள்” எனக் கட்டளையிட்டான்.

செனனிவேநதன கடடளையைச சிரமேற றாஙகிய சேவகாகள ஆலிநாடடரை அடுதது அரசன ஆணையை அறிவிததனா ஆலிநாடா என செயவாா பாவம! செலவமிருநதாலனறோ செனனி வேநதனுககுச செலுததுவா? அஃதிலலாததால அவா, காலை, நணபகல, மாலை, இரவு, நாளை, பினனிடடு எனபதாகச சில தவணைகளைச சொலலிககொணடு காலம நீடடிதது வநதனா இஙஙனம பனனாடகள கழிநதும பணஙகொடாமல இருநததலை அறிநத தூதுவாகள "இவா பணஙகொடுபபவாபோல தோனறவிலலை நாளைககு நாளைககெனறு இயமபிச சோாகினறனா நாம வீணே இஙகிருநதால அரசன நமமைத தணடிப்பான" என எணணிச சோாவடைநது தமமரசனிடம மஙகை மனனன கூறியதையும, அதனை பொருடடுத தாஙகள அஙகே தாமதிகக நோநததையும கூறி, மனனன அடிபணிநது நினறனா

பரகாலா மோசககருததையறிநத பாாததிபன கணகளினினறும நெருபபுப பொறி பறகக, புருவம நெறறியிலேறச சினஙகொணடு தன சேனைத தலைவனைநோககி "சேனைததலைவரே! ஆலிநாடன நமககளிககவேணடிய இறைபபொருளில இமமியும ஈயாது அவன எணணபபடி பொருளையெலலாம பெருமான அடியவாககே செலவுசெயது

வருகிறான். இப்போது நாம் அவனது துடுக்கை அடக்கினாலன்றி அவன் நம்மெண்ணப்படி நடவான்.

" முன்னவரு கூர்முனைவேலை முனையிலே களையி னல்லால்
களிவற வயிர்த்தபோது கனியமு மடியு"

மாதலால் நீர் விரைவிற்சென்று ஆலிநாடனைப் பிடித்து வருவீராக'' என்று கட்டளையிட்டான்.

அரசன் கட்டளைப்படியே சேனாதிபதி நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டுத் திருக்குறையலூரைக் குறுகினார். சோழமன்னன் சேனாதிபதி நால்வகைச் சேனாபலத்துடன் போர்புரியத் தன்னகரப்புறத்தே வருவதைப் பரகாலர் தூதுவர் மூலமாயறிந்தனர். உடனே ஆரவாரித்துக் குதித்தெழுந்தனர். பரகாலரென்னப் பெயரேற்ற அவர் பகைவர்க்குப் பணிவரோ? சிறிது நேரத்தில் ஆடலமா என்னும் சிறந்த புரவியின் மீதேறிச் சோழனது சேனைத்தலைவனோடும் சேனையோடும் போராடினார். ஆலிநாடர் ஆற்றலுக்குமுன் மற்றவர் ஆற்றல் நிலைத்து நிற்குமோ? அதனால் சோழன் சேனைகள் அவரோடு போர்புரிய முடியாது சூறையில் அகப்பட்ட பஞ்சைப்போலும், பரிதியைக் கண்ட பனியைப்போலும்'' பறந்தோடின.

அமர்க்களத்தினின்றும் புறமுதுகிட்டோடிய சேனைவீரர்கள் சோழனை அடைந்து தாம்

அடைநத தோலவியைத தெரிவிதது நினறனா அதுகேடட சோழன முனனிலும பனமடஙகு கதி மாகக கோபஙகொணடு "ஆலிநாடனுககு அவ வளவு துணிவுணடாயதா? இருககடடும இப போழுதே யானபோய வெனறு அவனைச சிறை செய்கினறேன அவன துணிவிருநதவா றென னே!" எனறு கூறித தன ஆசனததை விடடுச சரேலென எழுநதான அரசன கூறிய மொழி களைக கேடட சமீபததிலிருநத சேனைத தலைவாகள உடனே சேனைகளைத திரடடிக கொணடு தமமரச னுடன புறபபடடு ஆலிநாடனோடு அமாபுரியச செனறனா

அரசனே தனனிடம அமாபுரிய வருதலை யறிநத ஆலிநாடா சிறிதேனும அஞசாது முன போலவே தம பரிமீதிவாநது அரசனது சேனைக கடலுள நுழைநதனா, சிறிது போழுதில பகை வன சேனையைச சினனாபினனமாக வெடடி வீழத தினா அவாகளுள, கையறுபபடுணடவா சிலா, காலறுபபுணடவா சிலா, தலையறுபபுணடவா சிலா, கணணிழநதவா சிலா, காதிழநதவா சிலா

இவவாறு தன படை வீராகள சினனாபினன மாக அழிநது,இரததப பெருககில வீழநது,மூழகு வதைககணட அபயராஜ சோழன "அமாபுரிநத ஆலிநாடனைச சிறை செயதல நமமால ஆகுங

காரியமனறு ஆகலான இவனை அணமி நய வாாததைகள கூறி, வஞசிததே சிறைசெயதல வேணடும" எனத தனனுளததே கொணடு ஆலி நாடரை அணுகி "மஙகை மனனனே! பரகால ரெனும பெயா உமககே தகும தன பெருக கேறப நடநது கொளளும மககளை இநநில உலகததில உமமைத தவிர இதுகாறும நான வேறொருவரையுங காணேன உமமுடைய வீரத தை நேரிற காணவேணடியே வீராகளுடன நான எதிாததேன, உமது ஆறறலையும, தைரியததை யுங கணடு களிபபடைநதேன இனி நமமிருவருக கும பகைவேணடாம போரை நிறுததுவீராக!" எனச சாதுரியமாகச சமாதான வாாததைகளைக கூறினன

இஙஙனம சோழன கூறிய வஞசக மொழி களை மஙகைபாகோன உணமை யுரையென நம பிப போரை நிறுததிச சிறிது நேரம வீணே நினறனர் அபபோது அரசனுடைய அககருததை முககுறிபபால அறிநத அமைசசா ஆலிநாடரை அணமி அவரைச சிறைசெயதனா "வலலவனை யும தடடும வழுககும பாறை" என்று கூறுவதுண டலலவா?

இவ்வாறு சிறைப்பட்ட ஆலிநாடர்,

"மயிரோடு சிறையிழந்த போகில்போல் வேலியொடு
வரம்பிழந்த
பயிரேபோற் காமிழந்த கரியேபோற் பொறியிழந்த
பாவையேபோல்
உயிரேபோய்ப் பரிதவிக்கு முடலேபோல் மத்தாலுள்
ளுடைந்த வம்பும்
தயிரேபோற் றளர்ந்து .. "

யாதொரு செயலுமற்று வீணே நின்றனர். உடனே அரசன் அமைச்சன் முதலானவர்கள் அவரை உடன்கொண்டு சென்று சிறைக்கோட்டத்தில் அடைத்துப் பலவிதத் தீங்குகள்புரிந்து துன்பங்களுண்டு பண்ணினர்.

சிறைக்கோட்டம் புக்க ஆலிநாடர் மாற்றரசனால் சிறைப்பட்டதைச் சிறிதேனும் சிந்தியாது, "இன்று நாம் பாகவதர்கட்கு அமுது படைக்கும் பாக்கியம் பெறவில்லையே! இதற்கென் செய்வது" என்ற எண்ணமே எண்ணத்தி லுடையவராய், உணவை உட்கொள்ளாதிருந்தனர். மேலும், "அரசர்க்குப் பொருள் நாம் எவ்வாறீவது? பொருளீயாவிடின் சென்னிவேந்தன் நம்மைச் சிறையினின்றும் விடானே? இதற்கு யாது செய்வோம்?" எனப் பலவாறு யோசித்தனர். பின் யாதொரு வகையும் அறியாதவராய் "இஃது நம்மாலாகுங் காரியமன்று. கமலக் கண்ணன் அருள்புரிவரேல் இக்காரியம் கடிதில் முடியும்" என நினைத்து,—

"வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன்"

பாதகமலங்களையும், திருக்கச்சியில் எழுந்தருளியுள்ள பேரருளாளப் பெருமான் திருவடிகளையும், இருதய கமலத்தில் இடையறாது சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறே மூன்று நாட்கள் கழிந்தன. நான்காவது நாள் இரவு தம்மடியார்க்கு வேண்டியதை அன்புடனீயும் பேரருளாளப் பெருமான் அவர் கனவிலே தோன்றி, "அன்பனே! அஞ்சற்க! நீ கடிதில் கச்சிப்பதியை அடைவாயானால் நீ விரும்பிய பொருளைப் பெற்றுச் சோழன் கடனைத் தீர்ப்பாய்!" என, ஆஞ்ஞாபித்தருளினர். உடனே ஆலிநாடர் கண்விழித்துக் கமலக்கண்ணனின் திருவருளை வியந்து வியப்புற்றனர்.

கதிரவனுதிக்கவே காவிரிநாடன் காவலாளர் சிறைக்கோட்டம்புக்கு மங்கை மன்னனைக்கண்டு "ஆலிநாடரே! நீர் அரசர்க்களிக்க வேண்டிய பணத்திற் கென்னபதில் சொல்லுகின்றீர்? குறிப்பிட்ட தவணை நாட்களும் நேற்றுடன் கழிந்தன. இனிச்சென்று அரசர்க்கு நாங்கள் என்னபதில் அளிப்பது, அதனை விரைவில் தெரிவிப்பீராக!" என்று கடிந்து கூறித் துன்புறுத்தினர்.

காவலாளர் கடிந்து கூறித் துன்புறுத்துவதைப்பொறுத்த ஆலிநாடர், நம் பெருமான் அருளியவாறே அவர்களை நோக்கி, "நீங்கள் என்னுடன் கச்சிப்பதியை யடைந்தால் அங்கு ஆபத்தனமாகச் சேமித்து வைத்திருக்கும் பொருளைக் கொண்டு காவலன் கடனைத் தீர்த்துவிடுகிறேன்" எனக்கூறினர்.

ஆலிநாடர் கூறிய மறுமொழியைச் சிறைக் காவலர் மன்னனிடம் வந்து விண்ணப்பித்துக் கொண்டனர். மன்னன், "மங்கையர்கோன் கூறிய மொழியின் உண்மையை ஆராய்ந்தறிவோம்" எனவெண்ணி அமைச்சரை நோக்கி, "மதிவலீர்! மங்கை மன்னனைக் காவலிட்டுக் காஞ்சீபுரம் அழைத்துச்சென்று, அவனளிக்கும் பொருளை வாங்கி வாருங்கள்" எனக் கட்டளையிட்டான். அங்

ஙனமே அமைசசரும ஆலிநாடடைக காவலிட
டழைததுச சென்றனர

சோழனது பரிஜனஙகள தம பினனே தொடரநதுவர நீலன காஞசீபுரமபோயச சேரநதார அருளாளப பெருமான அருளியவாறு கசசிபபதியின தெனறிசையிலுள்ள ஆறறை யடைநது பலவிடஙகளிலும தேடிபபாரததனர பொருளோ கிடைககவிலலை அபபோது சிறைக காவலர பரகாலரை நோககி, "நீர எஙகளை வஞசிதது இஙகு அழைததுவநது, எஙகள வசமிருநது தபபியோடச சூழசசி செயகினறீரோ? இனி உமது எணணம நிறைவுறாது நாஙகள தகக காவலுடனதான வநதிருககிறோம" எனக கூறி மேனமேலும துனபுறுததினர

பரகாலர தாம பொருள கொடுபபதாயச சொலலி அழைததுவநத வணணம கொடுககவியலாமறபோனதைககுறிதது விசனமுறறு யாதொனறும பதிலுரையாமல அவரகளோடு அனறிரவு அபபதியிலேயே தஙகியிருநதார அரவணைச செலவன அடிகளை அநதினமும அகததிற கொணடுளள மஙகைமனனன சிறைககாவலர தம்மைச சூழநதிருகக அனறிரவு அவரகடகிடையே ஓரிடததில மிகக வருததததுடனிருககுங காலதது மெயமமறநது சிறிதுபொழுது துயில கொணட

னார் அப்போது அருள்வள்ளலாராகிய வரதராஜப்பெருமான் ஆலிநாடர் கனவிலே தோன்றி, "அன்பனே! நீ அஞ்சற்க! நாம் உமக்குக் கூறிய பொருள் வேகவதி நதியின் கரையிலுள்ளது அது காவிரிநாட்டினுக்கு நீ கட்டவேண்டிய கப்பத்தினும் அதிகமானது நீ அங்கு சென்று தேடினால் திரவியமிருக்குமிடம் அறிவாய்" என்று பொருளிருக்கும் இடத்தை அடையாளத்துடன் கூறிப்போந்தார்

அருளாளப்பெருமான் அருளிய அமுத மொழியைத் திருமங்கைமன்னன் திருமுடியிலேற்று ஆனந்தக் கூத்தாடிப் பாடிப் பரவசமடைந்தனர், காலையிலெழுந்து காவலாளருடன் வேகவதி நதிக்கரைக்கு விரைவாய்ச்சென்று எம்பெருமான் குறிப்பிட்டவிடத்தே எல்லையில்லாப் பொருளைக்கண்டனர் கண்டதும் களிகொண்டு அப்ராஜனுக்கு அளிக்கவேண்டிய கப்பத்தைக் காவலாளரிடம் ஒப்புவித்தனர் கருந்தனம் பெற்ற காவலாளர் ஆச்சரிய மடைந்து ஆலிநாடரை வணங்கி, "அரசே! உம்முடன் இதுகாறும் இவ்வளவு தூரம் அலைந்து திரிந்த எங்களைவெறுங் கையராய் அனுப்புதல் தருதியோ? எங்கள் சிரமத்திற்குத் தக்கவாறு ஏதேனும் கைம்மாறு அளித்தல் கூடாதா?" என்று வேண்டி நின்றனர்

இவ்வார்த்தையைக் கேட்ட பரகாலர் மன
மிரங்கி வேகவதி நதி தீரத்தின் மணலை அளந்து
அவர்க்களித்தனர் அஃது செழுமை மிக்க நெல்
லாயிருக்கக் கண்ட காவலாளர் மனமகிழ்வுடன்
அதனைப் பெற்று விடைபெற்றுச் சென்றனர் பின்
னர் மங்கைமன்னன் மிகுந்த பொருளை எடுத்துக்
கொண்டு தம் தலைநகராகிய திருக்குறையலூரை
யடைந்து முன்போலவே திருமாலின் அடியார்க்
குத் திருவமுதளித்து உபசரித்து வந்தனர்

ஆலிநாடர் அளித்த பொருளைப் பெற்ற
அமைச்சர் முதலான பரிஜனங்கள், காவிரிநாடன்
கழல்பணிந்து அவனிடம் நிகழ்ந்த செய்தியை
அறிவித்துப் பொருளைக் கொடுத்தனர் அப்போது
சென்னிவேந்தன் வியப்பும் அச்சமுமடைந்து
பரகாலர் பிரபாவத்தைப் பலரறியக் கொண்டாடி
"இவர் சாதாரண மனிதரல்லர் நாமனைவரும்
வணங்கும் தகுதிவாய்ந்த ஞானச்செல்வர் நான்
இவரது பெருமையை அறியாது பலவிதமாக
வருத்தி அபசாரப்பட்டேன் அப்புனிதரின் மகி
மையையறியாது அவமதித்துக் கடிந்த என் செங்
கோன்மையின் முறையென்னே ? பாவியேனாகிய
யான் பரகதியடைவ தெங்ஙனம் ? பரகாலராகிய
அப்பெருந் தகைக்குப் பகவான் பொருளையளித்த
இச்செயல் முன்னே மன்னர் களவையில் திரௌ

பதிக்குப் புடவையைச் சுரந்தளித்த செய்கையன்றோ ஒத்திருக்கின்றது!" என்று கூறினன்.

பின்னர் அரசன் ஆலிநாடரிருக்குமிடஞ் சென்று அவர் திருவடிகளிற் பணிந்து, "மெய்ஞ்ஞானச் செல்வரே! பேதையேன் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். அறிவிலியாகிய யான் அருளுருவாகிய தங்கள் பெருமையைச் சிறிதேனும் அறியாதவனாயினேன். அதனிமித்தம் என்னை மன்னித்தருள்செய்யவேண்டுகின்றேன்" எனப் பிரார்த்தித்து நின்றான்.

ஆலிநாடர் அரசனைநோக்கி "வேந்தே! இவ்வுலகில் நடக்கும் எல்லாச் செய்கைகளும் எம்பெருமான் திருவருளினாலேயாதலின் அதற்கு நீ மனங் கவல்வது முறையன்று" என ஆறுதல்கூறித் தேற்றினர். பின் அரசன் அவரைநோக்கி "பரந்தாமன் அடியவராகிய தங்களை இனிச் சேனைத் தலைவராக வைத்திருத்தல் நீதியன்று. இனி உமது திருப்பதியாகிய திருக்குறையலூரிலே உமதெண்ணப்படி பாகவதர்கட்கு அமுதுபடைத்துச் சுகமாயிருப்பீராக!" எனக்கூறி, வழியனுப்பினன். பின் மங்கைமன்னனால் தனக்கு அளிக்கப்பட்ட பொருளைத் தன் பொருளோடு சேர்த்துக்கொள்ளாது, அவரைச் சிறையிலடைத்து, பட்டினியாய்க் கிடந்திடத் துன்புறுத்திக் கெடுதல் செய்ததனாலுண்

டாகிய பாவம் தீர்தற்பொருட்டு அநேக பாகவதர் கட்குப் பன்னாள் அமுதளித்துப் பரிசுத்தனாயி ருன்.

---

## ஐந்தாவது இயல்

---

## மங்கைமன்னன் வழிப்பறியும், திருமால் காட்சியும்

காவிரிநாட்டைக் கடந்து தீர்த்து மிகுந்த பொரு ளைக் கொண்டு திருக்குறையலூரை யடைந்த திரு மங்கைமன்னன் முன்போலவே நாடோறும் ஆயி ரக்கணக்கான பாகவதர்க்கு அமுதளித்துவந்தார் திருமாலுக்குக் கடிமை செய்வதிலும், பாகவதர்களைப் போற்றி உபசரிப்பதிலும், இவர் கண்ணுங் கருத்துமாயிருந்ததால் பெற்றபெரு நிதியனைத் தும் நாளடைவில் குறைந்துபோயின. அதனால் அவர் பரமன் அடியவரை ஆராதிக்கும் வழியறி யாது திகைத்தனர், பின்னர் அடியவர்க்கு அமுதளிக் கப் பொருள்தேடவேண்டுமென எண்ணங் கொண் டனர் பரந்தாமன் அருளால் அப்பொழுது அவ ருக்கு நால்வர் அமைச்சராயும், துணைவராயும் இருந்தனர் அந்நால்வரும் முறையே நீர்மேல் நடப்பான், நிழலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்னும் பெயரினையுடையவர் கள் அவர்கள் மிக்க சாமர்த்தியம் வாய்ந்தவர்கள்

ஒருவராலும் செய்து முடிக்க இயலாத காரியத்தை ஒவ்வொருவரும் தானே செய்துமுடிக்குந் தன்மை யுடையவர் ஆகையால், நம் ஆலிநாடர் இத்தகையத் துணைவர்களோடு கூடிப் பகவான் அடியவர்களை ஆராதிக்கப் பணம் சேகரிக்கும் வழியைப் பற்றி ஆலோசித்து ஒவ்வொருவரையும் நோக்கி அவரவர்கள் எண்ணத்தைக் கூறும்படிக் கேட்டனர்.

நீர்மேல் நடப்பான்:—ஆலிநாடரை நோக்கி "அரசே! செல்வத்தைக் குறித்துத் தாங்கள் ஏன் கவலை யடையவேண்டும்? தாங்கள் கட்டளையின்படி அனந்தன் முடியிலுள்ள ஆயிரம் மணிகளையும் அரைநொடிப் பொழுதில் அபகரித்துத் தங்களிடம் தவறாது கொடுப்பேன்" என்றான்.

நிழலொதுங்குவான்:—"பரகாலரே! பொன், மணி, முத்து முதலியவைகளை வாணிபத்தின் பொருட்டுக்கொண்டு செல்லும் வணிகர் முதலோரின் நிழல்போல அவர்களின் பின்னே சென்று அவர்கள் கைப்பொருளை யெல்லாம் அவர்களறியாவண்ணம் கொணர்ந்து தங்கள் கைக்குள்ளாக்குவேன். தாங்கள் இதன்பொருட்டு மனங்கலங்கல் வேண்டாம்" என்றான்.

தாளூதுவான்:—"இறைவரே! அரசர்கள் அரண்மனையின் முற்றத்தில் காவல்புரியும் காவ

லாளரின் காற்சுவட்டிலேயே பொதுங்கி அரண்
மனை புக்கு ஆங்குள்ள அருநிதியனைத்தையும் அப
கரித்து உமதாக்க ஆக்குவேன். அன்றியும் தங்க
ளருள்தேல இந்திரன் மணிமுடியையும் இமைப்
பொழுதிற் கொணர்ந்தளிப்பேன்" என்றான்.

தோலாவழக்கன் —"கொற்றவ்ரேறே! இம்
மூவர் கூறியனவெல்லாம் நமக்கேற்றதன்று;
நாம் பிறர்க்குரிமையாயுள்ள இடங்கட்குச் சென்று
வேண்டிய பொருளைப் பெறுதல் ஏற்றதன்று.
நமக்குச் சொந்தமாயுள்ள இடத்தினின்றே நாம்
வேண்டியபொருளைப் பெறுதல் வேண்டும். அதற்
குத் தக்க வழியொன்றுளது. அது எதுவெனில்,
நமது நாட்டிலே வழிச்செல்வோர்கள் யாவரும்
செல்லுதற்குரிய திருமணங்கொல்லை யென்னும்
பொழிலிலே நாம் மறைந்திருந்து வழிப்பறி
செய்தலேயாம். இங்ஙனம் செய்வோமானால் நம்
காரியம் யாதொரு தடையுமின்றி முடிவுபெற,
வேண்டியபொருள் கிடைக்கும்" என்றான்.

நண்பர்கள் நால்வருங் கூறிய மொழிகளைக்
கேட்ட நீலனார் அவர்களை நோக்கி "தோழர்களே!
தோலாவழக்கர் கூறியதே நமக்கு ஏற்ற தொழி
லாகும். ஆதலால் நாம் அவ்வாறே செய்வோம்"
எனக்கூறித் திருமணங் கொல்லைக்கு அந்நால்வ
ருடன் வந்தடைந்தனர். பின்னர் அவர்களுடன்

அவ்வழிச் செல்வோரைச் சூறையாடிக்கொணர்ந்த பொருள்களால் திருமால் அடியார்களைப் பூசிக்கும் நோன்பை நோற்றுவந்தார்.

இங்ஙனம் அவர் கொள்ளை கொள்வதும் ஸ்ரீ வைஷ்ணவர்களை வழிபடுவதற்கே யாதலான், ஸ்ரீமந் நாராயணன், இச்செயலைத் தீவினையாகத் திருவுளம் பற்றாமல் நல்வினையாகவே நயந்து இவர்க்கு விசேட கடாக்ஷம் பண்ணி இவரை அங்கீகரிக்க வேண்டுமென்று திருவுளங்கொண்டனர். பின்னொருநாள் கொண்டல்வண்ணனும், திருமாமகளும் அந்தண வடிவந்தாங்கி மணக்கோலங்கொண்ட மணமக்களேபோல ஆடை அணிகளால் அலங்கரித்து நின்றனர். தேவர்களிற் பலர் அவருடைய பரிவார மாந்தர்களே போல மானுட வடிவந்தாங்கினர். தேவமாதர்களிற் சிலர் அங்ஙனமே மானிட உருக்கொண்டு திருமாமகளைச் சூழ்ந்து தோழிகளைப்போல நின்றனர்.

இவ்வாறு மானுட வடிவந்தாங்கிய திருமாலும், திருமகளும், பரிவார ஜனங்களோடும், தோழிப்பெண்களோடும் புறப்பட்டுத் திருக்குறையலூரின் சமீபத்திலுள்ள, திருமணங் கொல்லையென்னும் பொழிலின் வழியாய்ப்போவாராயினர். பட்டாடையுடுத்து, மணிநகை பூண்டு தாங்கள்

இருக்கும் வழியே யேகும் மணமகனையும் மண
மகளையும் கண்டு களிப்புற்ற ஆலிநாடார், “திரு
மாலின் அடியார்க்கு அமுதுபடைக்கும் பணிக்கு
யாதொருகுறைவு முண்டாகாவண்ணம் அனந்த
சயனனே இவர்களை இவ்வழியே ஏகும்படி ஏவி
னன்போலும் அடியார் உளத்திற்கிரங்கி அருள்
புரியும் அண்ணலின் பெருமையை என்னென்று
புகழுவேன்! அவரது கருணைத்திறந்தான்
என்னே! இவர்களை இப்பொழுது இவ்வழி
ஏகவிடாது தடுத்து, இவர்களிடமிருக்கும் ஆடை,
அணி, பொருள் முதலியவைகளைக் கொள்ளை கொள்
ளின் அநேக கோடிக்கணக்காகப்பொருள் நமக்குக்
கிடைக்கும் அப்பொருளைக்கொண்டு பல்லாயிரம்
பாகவதர்கட்கு அறுசுவையோடு அமுதுபடைத்
துப் பெருமகிழ்வடையலாம்” எனத் தன் மனத்திற்
குள்ளே தீர்மானித்தனர் உடனே தோழர்களுடன்
மறைந்திருந்த இடத்தினின்றும் புறப்பட்டு,
மணக்கோலத்துடன் வரும் ஸ்ரீமந் நாராயணனை
வளைந்துகொண்டு அவரிடமிருந்த எல்லா ஆபர
ணங்களையும், பொருளையும் பறித்துக்கொண்ட
னர்

பறித்தவர் மணமகன் காலவிரலில் அணிந்
துள்ள ஆழியொன்றைக் கழற்ற எவ்வளவோ
முயன்றும் முடியவில்லை ஆயினும், அதைவிட

மனமிலராய்த் தமது பல்லினாற் கவ்வி அவ்வணி கலனைக் கைக்கொண்டனர் பரகாலர் வெகு மிடுக்குடன் இவ்வாறு கழற்றியதைக் கண்டு, எம்பெருமான் அவரை நோக்கி, "கலியனே" என்று நாமமிட்டழைத்தனர்

பின்னர் ஆலிநாடர் தாம் அபகரித்த ஆடை ஆபரணங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி எடுத்துக்கொண்டு செல்ல எண்ணி அம் மூட்டையைத் தூக்கினர் ஆனால், எம்பெருமான் திருவருளால் அது அசைக்கமுடியாமல் அசலம் போல நிலைபெற்றிருந்தது ஆலிநாடர் அதைக் கண்டு ஆச்சரியங்கொண்டு, "இவ்வேதியரே இதை எடுக்க முடியாமல் மந்திரம் ஜபித்துள்ளார்" என்றெண்ணி "ஓ! அந்தணா! இம்மூட்டையை அசைக்கமுடியாமற் செய்தது உன் மாயமென்று யானறிவேன் அம்மந்திரத்தை இப்பொழுதே எனக்குச் சொல்லுவாயாக! இன்றேல் இங்கேயே உன்னை என்வாளுக்கு இரையாக்குவேன்" எனக் கூறித் தன் உடைவாளையுருவி ஓச்சிப் பயமுறுத்தினார்

அப்போது மாயைகளில் வல்லவனாகிய மாயவன் ஆலிநாடரை ஆட்கொள்ள அருள் நிறைந்த முகத்துடனோக்கி, "நான்செய்த மாயத்தை இன்னதென அறிவிப்பேன் என்னருகில் வா" என்ற

னர் அங்ஙனமே ஆலிநாடர் அந்தண வடிவங் கொண்ட ஆதிமூலரின் பின்னே ஒரு தனியிடம் சென்றனர் அங்கு அவர் பரகாலருக்கு அஷ்டாக்ஷரமந்திர உபதேசஞ்செய்து திருமகள் சமேதராய் பஞ்சாயுதங்களோடு கருடவாகனத்தின்மீது தமது உண்மை வடிவத்துடன்,

"போற்றிய மன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்ச வாயுதமும்
பெங்குழைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராஜன்முன் னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவும்
தோற்றமு மிலாதவைந் தளவோன்'

திருமகள் கொழுநன் இவ்வாறு தம் முன் தோன்றி அருள்புரியவே, ஆலிநாடர் கண்களினின்றும் ஆனந்தவருவி பெருக, உடல்புளகாங்கிதங்கொள்ள, உரோமம் சிலிர்க்க, கரங்கள் தாமே சிரமிசைச் சென்றுகுவிய, "பெருமானே! தேவரீரது மகிமையை அறியாத பாவியேன் ஆராயாது செய்த இப்பெரும்பிழையினின்றும் நான் எவ்வாறு தப்பியுய்வேன்? அடியேன் தங்களது கருணைத் திறத்தை என்னென்று வியப்பேன்? என்னை வலிய வந்து ஆட்கொண்ட வள்ளலே! தங்கள்

திருவருளால் மந்திரங்களுட் சிறந்து விளங்கும் மஹா மந்திரமாகிய அஷ்டாக்ஷர மந்திரோபதேசம் பெற்றேன்" என்று கூறி,

"அருந்தமுனிவர் மகம்புரிந்தும் கடவுட்கங்கை
யாடியாம் புனல்படிந்து மனில் யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசைநோற்றும்
எங்குமர் இயவுன்னை இதயத் தானே
திருந்தலிலை பெறக்கண்டும் போகமெல்லாந்
சிறங்கியன்னத் தாபிருக்குஞ் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கள் மிகப்பயினும் பெறுத்துறகெட்டாப்
பெருமயனின் திருவருளாற் பெறப்பெற்றேனே"

"நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீருங் காயாவு நீசாக்கு மிந்தக்
கோலமும் வெங்கதைவாளுஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும் படையுங் குழைந்த வாச
மாலைநறுந் துழாயமரும் திரண்டதோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் வாரிசாந்தக்
காலிலால் செணமலர்ந்த முகமும் சோதிக்
கதிர்முடியு மிமைமயிலே கண்ணுற்றேனே"

எனப் பலவாறு துதித்து ஆனந்தவெள்ளத்தில் மூழ்கி இன்புற்றனர்.

ஆதிகேசவனைத் தம்திருக் கண்களுடன் களிக்கக்கண்ட ஆலிநாடரின் மனம் வெயிற்பட்ட வெண்ணெயைப்போல உருகியது. அவருக்குண்டான ஆனந்தம் உள்ளடங்காமல் பெருக்கெடுத்து

வெளியே வருவதைப்போல் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளாலும் பெருமானது திவ்ய குணங்களைப் பாடத்தொடங்கி, தமக்கு அப்பெருமான் உபதேசித்த அஷ்டாக்ஷர மந்திர மகிமையைப்பற்றி முதலில்

“ வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்”

எனப் பத்துச்செய்யுட்களாற்பாடினார். வடமொழி வேதங்கள் நான்கிற்கும் ஆறங்கங்கள் அமைந்திருப்பதைப்போல, அவ்வேதங்களின் உட்பொருளாக நம்மாழ்வார் அருளிச்செய்த, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்கட்கும் தமது பிரபந்தங்கள் அங்கங்களாயமையும்படி, பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருநெடுந்தாண்டகம், திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களைத் திருவாய் மலர்ந்தருளி, திருமங்கை

யாழ்வார் என்றும், நாலு கவிப்பெருமான் என்றும் திருநாமம் பெற்றார்.

இங்ஙனமன்றி இவர் நாற்கவிப் பெருமான் என்ப் பெயரேற்றதற்குக் காரணமாம் பரம்பரையாக வழங்கும் ஒரு கதையுண்டு; அதாவது —

ஆலிநாடர் அபயராஜனுக்குச் சேனைத்தலைவராகவும், மங்கை நாட்டிற்கு மன்னனாகவும் இருந்து வருங்காலத்தில், நாற்கவிப் புலவர் என்னும் பட்டப் பெயர்பெற்ற தமிழ்ப்புலவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் மேம்பட்டவர்; மேலும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளைப் பாடுவதில் இந்நானிலத்தில் நிகரற்றவர். அதனால் அவர்,

"கட்டிலே யனைப்பமையாம் கலவியா லென்னு
மட்டிலே றனைய , "

செருக்குற்றுத் தருக்கி வாழ்ந்தனர். அவர் பல புலவர்களை வாதில்வென்று, பல விருதுகளையும், பல பரிசுகளையும் பெற்றுப் பெருமையுற்று விளங்கினர். அக்காலத்து நம் ஆலிநாடரும் கல்வியிற் சிறந்து விளங்கினர். அதனையறிந்த நாற்கவிப் புலவர் பரகாலரை வாதில்வெல்ல எண்ணங்கொண்டு அவரிடம் தமது பரிவாரங்களுடனும், விருதுகளுடனும் வந்தடைந்தனர். பரகாலரென்ப் பெயரேற்ற மங்கை மன்னன் தமக்கு

விரோதிப்பாய்த் தோன்றியவரை வென்று வெற்றி யடையாது வீணேயிருப்பாரோ? உடனே அப் புலவரை வாதில் வென்று அவர்செருக்கையடக்கி அவரது விருதுகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு நாற்கவிப்புலவர் என்னும் அவரது பட்டப் பெயரையும் தாம் வைத்துக் கொண்டனர்

மங்கைமன்னன் அப்புலவரை வாதில் வென் றதையறிந்த அப்பராஜனெனும் சோழன் அவ ரைத் தன்பால் வருவித்து "வீரரே! நீர் விற் போரில் யாவரினும் சிறந்தவராய் விளங்கிக் கீர்த்தி யடைவதேபோல, சொற்போரினும் யாவரினும் சிறந்தவராய் விளங்குகின்றீர்! நற்கவிப்பெருமான் என்னும் பட்டப்பெயர் உமக்கேயேற்றது!" என்று புகழ்ந்து, பல விருதுகளையும், பரிசுகளையும் ஈந் தனன் சோழமன்னனால் அளிக்கப்பட்ட பரிசுகளைப் பெற்ற மங்கைமன்னன் அவைகளை அன்புட னேற்று,

" வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழிதோ றுலகங் காக்க"

என்று மன்னனை மனமாரவாழ்த்தித் தம்மிருப்பிட மாகிய திருக்குறையலூரை அடைந்தனர் — என் பதாம்

## ஆறாவது இயல்

### ஆழ்வார் திவ்விய தேசயாத்திரையும் ஞானசம்பந்தரும்

மங்கைமன்னன், மேற்கூறிய அறுவகைப் பிரபந்தங்களுள் பெரிய திருமொழி பாடுகையில் திவ்யதேசயாத்திரை செய்யத் திருவுளங் கொண்டனர் திருவுளங் கொண்ட ஆழ்வார் முதலில் வடநாடடைந்து, தொண்டமான் சக்கரவர்த்திக்கும், ஆறுமுகப் பெருமானுக்கும் காட்சியளித்த திருவேங்கடத்தையும், ஹிரண்யனை ஸம்ஹரித்து, பிரஹலாதாழ்வானுக்கு அருள்புரிந்த சிங்கவேள் குன்றத்தையும், பரதாழ்வானுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பிரத்தியக்ஷமாய திரு அயோத்தியையும், தேவரிஷிகளுக்கும் இந்திராதிகளுக்கும், சுதாமனுக்கும்சேவைதந்தருளிய நைமிசாரண்யத்தையும் பிரமருத்திராதிகளுக்குப் பிரத்தியக்ஷமான சாளக்கிராமத்தையும் இலந்தைமரத்தின்கீழே பத்மாசனங் கொண்டு ஞானமுத்திரை தரித்து ஜயசீலரான தபஸ்வியாய நரனுக்குத் திருமந்திர உபதேசஞ்செய்த வதரியாசிரமத்தையும் திரௌபதிக்குக் காட்சி தந்த துவாரகையையும் இந்திராதி தேவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய வட

மதுரையையும நநதகோபனுககுப பிரததியக்ஷ மாய அருளபுரிநத திருவாயபாடியையும பிரமருத ராதிகளுககுப பிரததியக்ஷமாய திருபபாறகடலையும அடைநது, ஆஙகாஙகு எழுநதருளியுளள எம பெருமானைத தொழுது திருபபதிகம பாடினா

பினனா தொணடைநாடடைநது, பிருகு மஹரிஷிககும, பிரமமாவுககும, நாரதருககும, திருவனநதாழவானுககும, கஜேநதிராழவானுககும் பிரததியக்ஷமாய திருககசசியையும கஜேநதிராழ வானுககுப பிரததியக்ஷமாய திருவடடபுயஙகத தையும சரஸவதி தேவிககுப பிரததியக்ஷமாய அருளபுரிநத திருநதணகாவையும பிருகு மஹ ரிஷிககுப பிரததியக்ஷமாய வேளுககையையும; ஹரீதய மஹாமுனிககுக காடசி தநதருளபுரிநத பாடகம எனனும க்ஷேததிரததையும அக குரூரருககுச சேவை தநதருளிய திருநீரகத தையும சிவபெருமானுககுப பிரததியக்ஷமாய அருளபுரிநத நிலாதிஙகள துணடமெனனும க்ஷேததிரததையும உரமெனகிற ஆதிசேடனுக குக காடசிதநதருளிய திருவூரக மெனனும க்ஷேததிரததையும பொயகையாழவாருககும, கணிகணணருககும, பிரமமாவுககும காடசிதநத திருவெஃகாவையும காஹரிஷிககுப பிரததிய க்ஷமாயருளபுரிநத திருககாரகததையும அசவதத

நாராயணனுக்குக் காட்சி கொடுத்தருள்புரிந்த திருக்கள்வனூர் என்னும் திவ்யதேசத்தையும் அச்வினிதேவதைகளுக்கும், பார்வதிக்கும் சேவை தந்தருளிய திருப்பவள்வண்ணம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தையும் பல்லவராயனுக்குப் பிரத்தியக்ஷமாய பரமேச்சுரவிண்ணகரத்தையும் ஜடாயுவுக்குப் பிரத்தியக்ஷமா யருள்புரிந்த திருப்புட்குழியையும் சாலிஹோத்திரருக்குக் காட்சிதந்தருளிய திருவெவ்வுளூரையும் அடைந்து, ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பெருமாளைத் தொழுது மங்களா சாசனஞ் செய்தனர்.

மேலும் அவர் அந்நாட்டின்கண்ணுள்ள திருநின்றவூரென்னும் திவ்ய க்ஷேத்திரத்தையடைந்தனர். அத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள பத்தராவிப் பெருமாளைப் பாகவத குழாங்களுடன் சேவிக்கச் சென்றனர். அப்பொழுது அப்பெருமான் ஆழ்வாருக்கு முகங்கொடாமல் பராமுகமாயிருந்தனர்.

பரகாலர் அதுகண்டு கவலையுடன் திருவல்லிக்கேணிக்குச்சென்று சுமதியென்னும் அரசனுக்கும், தொண்டைமான் சக்கரவர்த்திக்கும், அர்ச்சுனனுக்கும் காட்சியளித்த திருவேங்கட கிருஷ்ணனையும், பிருகு மஹரிஷியினால் கன்னிகாதானம் செய்யப்பெற்றவராகிய (அரங்கநாதன்) மந்நாதனையும்

அத்திரி மஹரிஷிக்கும், ஜாலிமஹரிஷிக்கும் பிரத்தியக்ஷமாய் மோக்ஷமளித்த வராஹநாயனாரையும் சப்தா குமாரரான மதுமான் மஹரிஷிக்குப் பிரத்தியக்ஷமாய், சக்கரவர்த்தித் திருமகனையும் சபத ரோமாவுக்குப் பிரத்தியக்ஷமாய தேவப்பெருமானையும் சேவித்துப் பதிகம்பாடினார்.

பின்பவர், திருநீர்மலை என்னும் திவ்ய க்ஷேத்திரத்தை யடைந்து, அங்குத் தொண்டைமான் சக்கரவர்த்திக்கும், மார்க்கண்டேயருக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த நித்யகல்யாணரின்மீது மிக்க ஈடுபாடுகொண்டு பதிகம்பாடினார். மார்க்கண்டேயருக்குக் காட்சியளித்த திருவிடவெந்தையையும் சிறியதிருவடிக்குப் பிரத்தியக்ஷமாய் அருள் புரிந்த திருக்கடிகையையும் அடைந்து ஆங்காங்கு அடியார்களுக்கு அநுக்கிரகிக்க எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சேவித்து மங்களா சாஸனஞ் செய்தனர்.

அநந்தரம் திருக்கடன்மலையை யடைந்து புண்டரீகரிஷிக்குப் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த தலசயனத் துறைவார் என்னும் எம்பெருமானைச் சேவித்து நின்றார். அப்பொழுது திருநின்றவூரெம்பெருமான் திருமகளால் தூண்டப்பட்டு இவர்பால் பாடல் பெறவுச் சிறப்புறக் கருதிக் கடன்மலை என்னும் க்ஷேத்திரத்தில

காட்சி கொடுக்க, ஆழ்வார் அப்பெருமானையும் அங்கே கண்ணாரக் கண்டுகளித்து அவ்வூர் பதிகமாகிய பெரிய திருமொழி இரண்டாம் பத்தில், ஐந்தாந் திருமொழி, இரண்டாவது செய்யுளிலே,

“நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்
கண்டது நான் கடன்மல்லைத் தலசயனத்தே”

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அப்பால் திருமங்கையாழ்வார் நடுநாட்டுத் திருப்பதிகளாகிய சந்திரனுக்கும், கருடனுக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த, தெய்வநாயகப் பெருமாள் எழுந்தருளியுள்ள திருவயிந்திரபுரத்தையும் மிருகண்டு மகா முனிவருக்கும், மகாபலி சக்கரவர்த்திக்கும் காட்சி தந்தருளிய திருக்கோவலூரையும் அடைந்து ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பெருமானைத்தொழுது திருப்பதிகம் பாடினார்.

பின் சோழநாட்டுத் திருப்பதிகளை யடைந்து முதலில் சிவபெருமானுக்கும் தில்லை மூவாயிரவருக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த தில்லைத் திருச்சித்திரகூடம் அடைந்து, எம்பெருமானைத் தரிசித்துப் பதிகம் பாடினார், பின்பு சீகாழியின் வழியாக எழுந்தருளினார்.

அப்போது வழக்கப்படி இவருடைய பரிஜனங்கள் இவர் முன்னே "நாலுகவிப் பெருமாள் வந்தார், நம்கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், பரவாதி மத்தகஜ கண்டீரவர் வந்தார், பரகாலர் வந்தார், நீலநிறத்து நிமலர் வந்தார்" என்று, பிருதாவளிகளை எடுத்தேத்திக் கொண்டு செல்லா நின்றனர். அப்போது அவ்வூரிலுள்ள திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், இந்தப் பரமபக்த சிரோமணியின் வரவை அறிந்து எதிர்கொண்டு வந்தழைத்து உபசரித்துக் காழியில் தம்முடனிருந்து போகும்படி கேட்டுக் கொண்டார்.

பரகாலர், திருஞான சம்பந்தரை நோக்கி "ஞானச்செல்வரே! யான் பாண்டவதூதன் எழுந்தருளியுள்ள பதிகட்குச் செல்லுதலன்றி, மற்றைப் பதிகள் எத்துணைச் சிறப்பினவாயினும் அப்பதிகட்குச் செல்லேன்" என்று தாம் மகாவிஷ்ணுவிடம் கொண்ட பரம பக்தியின் உறுதி விளங்கக் கூறினார்.

ஞானசம்பந்தர் "அன்பரே! ஸ்ரீராமபிரான் இராவணாதி அரக்கர்களோடு போர்புரியத் தென்திசை நோக்கிவந்த நாளில் தங்கிய இடமிது. அப்பரமன் வந்து தங்கிய காரணத்தால் இப்பதிக்கு 'சீராம விண்ணகரம்' என்று பெயர்

மேலும் காளிவாசனஞ் செய்கின்ற காரணம் பற்றி இத்தலத்திற்கு 'காழிச் சீராம விண்ணகரம்' என்றும் பெயருண்டு இப்போழ்து இந்நகரம் சீகாழி எனவும் சீகாழி எனவும் வழங்கப்படுகிறது தாங்கள் இங்கே எழுந்தருள யாதொரு தடையு மின்று'' எனவேண்டி நின்றனர்

இங்ஙனம் திருஞானசம்பந்தர் கூறவே திருமங்கை மன்னன் களிப்படைந்து அப்பெரியாருடன் சீகாழிக்குச் சென்றனர் அவ்விருவரும் அற்றைய பகற்பொழுதை உல்லாசமாய்ச் சம்பாஷிப்பதிலேயே கழித்தனர் மற்றை நாட்காலை ஆழ்வார் ஞானசம்பந்தரிடம் விடை பெற்று தமது ஜனனபூமிக்கடுத்த திருவாலியைச் சார்ந்து அங்கெழுந்தருளியுள்ள வயலாலி மணவாளனைத் தொழுது பதிகம் பாடினர்

மங்கை மன்னன்பாட்டுக்குகந்த மணவாளர் அவருக்குக் காட்சிதந்தருள் புரிந்தனர் பின்னர் திருநாங்கூர் திருப்பதிகள் பதினொன்றையும் நண்ணி மங்களாசாஸனஞ் செய்து, சந்திரனுக்குக்காட்சிதந்தருளிய திருவிந்தளூரையடைந்தனர்.

அப்பொழுது அத்தலத் தெழுந்தருளியுள்ள "சுகவனநாதன்" என்னும் எம்பெருமான் ஆழ்வாருக்குத் தம்மை ஒருகால் காட்டி மறைய அவர்

திருப்பதிப் பாடாமல் மனக்குறையோடு அத்தலத்துப் பதிகத்தின் நான்காம் பாசுரத்தில்,

"காசினொளியில் திகழும் வண்ணம் காட்டீர் எம்பெரு
வாசிவல்லீர்! இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே" [மான்

என்று தமது குறைபாடு தோன்றப் பதிகம்பாடினார்.

ஆழ்வார் தமக்கேற்பட்ட குறையைப் பாவில் வைத்துப்பாடவே பெருமான் மனமிரங்கி நிரந்தர சேவை கொடுத்தருள்புரிந்தனர். அருள்பெற்ற ஆழ்வார் நிரம்பியமனத்தராய் அப்பதியைவிட்டு அகன்று, சுக்கிரனுக்கும், பிரமாவுக்கும், பராசரருக்கும், இந்திரனுக்கும் காட்சிதந்தருளிய திருவெள்ளியங்குடி யென்னும் க்ஷேத்திரத்தையும் சக்கரவர்த்தித் திருமகனுக்கும், கிருத்ரராஜனுக்கும் பிரத்தியக்ஷமாய்க் கிருத்ரராஜனுக்கு முத்தி தந்தவிடமாகிய திருப்புள்ளம்பூதங்குடியையும் நந்தகமுனிக் கருள்புரிந்த திருக்கூடலூரையும் பெரிய திருவடிக்கும், சிபிசக்கரவர்த்திக்கும், பூமீதேவிக்கும், மார்க்கண்டேயருக்கும் காட்சிகொடுத்தருளிய திருவெள்ளறையென்னும் திவ்யக்ஷேத்திரத்தையும் அடைந்து, ஆங்காங் கெழுந்தருளியுள்ள அழகியமணவாளனைத் தொழுது பதிகம் பாடினார்

ஏழாவது இயல்

## அரங்கநாதன் ஆணையும், ஆழ்வார் பொருள்தேடலும்

இவ்வாறு திருமங்கை மன்னன் ஒவ்வொரு திவ்விய தேசத்திற்கும் சென்று ஆங்கெழுந்தருளி யுள்ள பெருமானைச் சேவித்துத் திருப்பதிகம் பாடி வரும் நாட்களில் ஒருநாள் தாமவாமாவுக்கும், ரவி தாமனுக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த விட மாகிய திருவரங்கம் பெரிய கோயிலை நண்ணி,

"நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப்
பாலவிரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரிந்தெழு தலையுடைய யருந்திறற்
பாயற் பள்ளி பலர்தொழு தேத்தும்
விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தி
திருவமர் மார்பன் கிடந்த "

வண்ணத்தைக் கண்டு தொழுது அப்பெருமான் புகழ்விலே மிக்க ஈடுபாடுகொண்டு பல பதிகங்கள் பாடினார் ஆழ்வார் அருளிய அமுதப்பாடலைக் கேட்ட அரங்கநாதன் திருவுள்ளமுவந்து திருமுக மலர்ச்சியோடு ஆழ்வாரைக்குளிர நோக்கி, "அன் பனே, நீ நமக்கு விமானம், மண்டபம், கோபுரம் பிரகாரம் முதலிய கைங்கரியங்களைச் செய்வாயாக" என்று கட்டளையிட்டருளினார்

ஆலிநாடர் அரங்கநாதன் இட்டவாணையைச் சிரமேற்றாங்கினர், உடனே தமக்கு அந்தரங்க நண்பராயும், அமைச்சராயுமுள்ள நீர்மேல் நடப்பான், நிழலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்ற நால்வரையும் அழைத்து வரச்செய்தனர். தலைவர் ஆணையைத் தட்டாது நடக்கும் அந்நால்வரும் அரசனாணையை யறிந்து அவர் இருக்குமிடம் வந்தணுகினர்.

ஆலிநாடர் அந்நால்வரோடும் ஒரு தனியிடத்திருந்து அரங்கநாதன் கோயில் திருப்பணியைக் குறைவின்றி முடிக்கும் விரகியாதென ஆராய்வாராயினர். தங்கள் கையிற் பொருளின்மையால் திருப்பணியை முடிக்கும் வகையை அறியாது திகைத்துக் கொண்டிருக்கும் திருமங்கை மன்னனை நோக்கி, அவரது அமைச்சர்கள், "ஐயன்மீர்! தாங்கள் இதன் பொருட்டுக் கவலையடைய வேண்டாம். திருநாகைப்பதியில் புத்தர் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அக்கோயில் பார்ப்போர் கண்களைப் பறிக்கும் விசித்திர வேலைப்பாடுகள் அமைந்து சிறப்புற்று விளங்குகின்றது. அதன்கண் உள்ள புத்த விக்கிரகமோ பத்தரைமாற்றுப் பசும்பொன்னாற் செய்யப்பட்டது. நாம் சென்று அவ்வாலயத்துட்புக்கு, அவ்விக்கிரகத்தை அபகரித்து வந்தால் அதைச்

சிதைதது அளவிறநத பொருளைப்பெறலாம அதனால நாம நினைததிருககும கைஙகரியமும இனிதே நடைபெறும" எனறு விணணபபஞ செயதனா

அமைசசாகள மொழிநத மொழியினைக கேடட ஆலிநாடா அவாகளுடைய சமயோசித அறிவினைப பறறிப புகழநது கொணடாடினா திருமால திருபபணிபுரியத தம நணபாகள கூறிய வழியன்றி வேறொரு வழியும தமககுப புலபபடாமையால பரகாலா அதுவே உசிதமென எணணிப பரிவாரஙகளுடனும் நணபாகளுடனும புறபபடடு, பல நகரஙகளைக கடநது, நாகை யமபதியை அடைநதனா அனறு பகறகால முழுதும அநநகரில சுறறிததிரிநது அநநகரின வளஙகளைக கணடுகளிததனா ஆதவன அஸதமிததததும அனறைய இராபபொழுதைக கழிகக அநநகரிலுளள ஓா அமமையாரின வீடடை அடைநதனா அவாகளைககணட அமமையாா அவாகளைத தேசாநதிரிகளென நினைதது அவாகள அனறிரவு தஙகியிருகக இடஙகொடுதது உபசரிததனள சிறிதுநேரம தாழநதபின தாஙகள கொணடு வநத உணவை யருநதிப பின அவவமமையாருடன அநநகர விசேடஙகளைபபறறி உல்லாசமாய அவாகளஉரையாடிக கொணடிருநதனா

அப்போது, ஆலிநாடர் - "அம்மையே! இந்நகரத்தில் கட்டப்பட்டுள்ள கோயிலின் பெயர் யாது? இஃது யாரால் கட்டப்பட்டது? இதன் பெருமை யென்ன? இவைகளை எமக்குத் தெளிவாய் எடுத்துச் சொல்லுவாயாக" என்று கேட்டனர்.

அம்மையார் —(அவர்களை நோக்கி) "இஃது புத்ததேவர் எழுந்தருளியுள்ள கோயில். இது மற்றைய கோயில்களைப்போலக் கட்டப்பட்டதன்று. இத்திருப்பணி செய்து முடித்தற்குப் பல வருடங்கள் சென்றன. வடகடலுக்கப்பாலுள்ள ஒரு தீவிலிருந்து தெய்வத்தச்சனையொத்த தொழில்வல்ல கம்மியர் பலர் வந்து இப்பெருங் கோயிலைக் கட்டிமுடித்தனர். இதற்காகச் செலவு செய்யப்பட்ட பணத்தொகையோ அளவிறந்தது. இக்கோயில் விமானத்தையும், இதனுள் எழுந்தருளியுள்ள சிலையையும் செய்து முடிக்கற் கேற்பட்ட சிரமமோ இவ்வளவு அவ்வளவென்று சொல்ல இயலாது. இச்சிலை மாற்றுயர்ந்த சீரிய ஆடகப்பொன்னால் அமைக்கப்பட்டு அளவிலா அழகுடன் சிறந்து விளங்குகின்றது".

ஆலிநாடர் —"அம்மையே! அச்சிலை நீர் கூறுவதுபோலப் பொன்னாற்செய்து, அளவிலாச் சிறப்பும், அழகும் அமையப் பெற்றிருக்குமாயின் கள்வர்கள்பலர் அதனைக் கவர்ந்துசெல்ல வழி

தேடுவரன்றோ? ஆதலான் அப்பொற்சிலைகளைக் கள்வர்கள் கவராவண்ணம் காவல் செய்துவர ஏற்பாடுகள் யாவை?"

அம்மையார் —"பெரியோரே! இக்கோயிலையும், விமானத்தையும் கட்டிமுடித்த கம்மியன் சாமானியமானவனன்று. அவன் ஆற்றலை யென்னென்றியம்புவது? அவன் பார்த்தற்கு மானிடவுருவத்துடன் விளங்குகின்றானேயன்றிச் செய்கைகளால் அவனை அங்ஙனம் கூற இயலாது. அவன் செய்த ஒவ்வொரு வேலைப்பாடும் கண்டோர் அதிசயிக்கும் திறத்தினவாய் விளங்கும். அப்படி அமைக்கப்பட்ட வேலைப்பாடுகளுள் அக்கோயில் விமானத்தின் உச்சியில் திகழ்ந்து விளங்கும் அற்புதயந்திரம் ஒன்று அத்திகிரி சதா சுழன்று கொண்டேயிருக்கும் தன்மையது. யாரேனும் அவ்வாலயத்துள் நுழைந்து அச்சிலைகளைக் களவு செய்ய எண்ணுவாராயின் அச்சக்கரத்தைச் சுழலாமல் நிறுத்திய பின்னர்தான் நுழைந்து களவு செய்யவேண்டும். இன்றேல் அச்சிலையிருக்குமிடம் புகவியலாது. ஆயின், அதன் வேகத்தை நிறுத்த ஆவல்கொண்டு அத்திகிரியிடம் செல்லின் ஆவியைத் துறத்தல் நிச்சயம். இத்தகைய இயந்திரமிருத்தலான் இதுவரை இக்கோயிலின் உள்ளே புகுந்து இச்சிலைகளைக் கவர ஒருவரும்

வநதிலா இவவாறு அவவியநதிரமே ஒருவரை யும உடபுகவிடாது காவல்புரிநது வரலான காவ லன காவல அமைககவிலலை"

ஆலிநாடா —(அளவறற ஆனநதமடைநது) "அமமையே! அளவறற திறமையமைநத இத தகைய கமமியரும இநநாளிலநதில விளஙகு கினறனரோ? அககமமியரின உதவி எமககுக கிடைககுமாயின எமமுடைய நாடடிலும இத தகைய கோயிலைக கடடி முடிபபோம ஆயினும, கடவுளருள எவவாறுளதோ?"

அமமையார —"அறிவிற பெரியோராகிய தஙகளுககுத தெரியாததைப பேதையேனாகிய யான எபபடி சொலலப்போகிறேன? இநநாளி லததில கலவி, கைததொழில, சிததிரம முதலி யவைகளில தேரசசியுறறு, மேமபாடடைநது விளஙகுவோா அளவிறநதவா அவாகளை ஆதரிப பவாகளோ இககாலததில இலா ஆதலால அவா களுடைய செயகைகள, நீறு பூதத நெருபபைப போல விளஙகுகினறன தாஙகள அளவிலாப பொருளீநது ஆதரிதது வருவீாகளாயின இதனி லும பனமடஙகு அதிக வேலைபபாடுகளுடன அதி சீககிரத்தில ஆலயததைக கடடி அமைகக லாம"

ஆலிநாடார் —"அம்மையே! அத்தகைய சிறப்பு வாய்ந்த கம்மியர்கள் யாண்டுளர்? தாங்கள் தயைகூர்ந்து அவர்கள் இருக்கும் பதியை இயம்புவீராகில் நாங்கள் சென்று அவர்கட்கு வேண்டிய பொருளீந்து, அழைத்து வந்து, எங்கள் மனக்குறை நீங்கப் புதியதாய் ஓராலயம் அமைக்கின்றோம்"

அம்மையார் —"பாகவதர்களே! நீங்கள் வடகடலைக் கடந்து அப்புறம் சென்றால் அங்கு ஓர் தீவு காணப்படும் அத்தீவினின்று வட கிழக்கு மூலையாகச் செல்வீராயின் அங்கு ஒரு மலை தோன்றும் அம்மலைக்கப்பால் பத்து மைல் தூரத்தில் பளிங்குக் கற்களால் பலவித வேலைப்பாடுகள் செய்த ஒரு மாளிகை தோன்றும் அம்மாளிகையே அக்கம்மியன் வசிக்கும் அரண்மனை" என மனமிரங்கிக் கூறினள்

அம்மையார் மூலமாய் எல்லா இரகசியங்களையும் அறிந்த ஆலிநாடார் அளவிலா ஆனந்தங்கொண்டு நம் காரியம் ஒருவாறு முடிவுற்றதென எண்ணங்கொண்டனர் பின்னர் அன்றிரவு அவ்விடத்தே துயின்று காலையிலெழுந்து அம்மையாரிடம் விடைபெற்று நண்பர்கள் நால்வருடன் வட கடற்கரையை நண்ணினர்.

அசசமயம அஙகு வாணிபத்தின பொருட்டு வடதிசை அடையப பணடஙகளை மரககலஙகளி லேறறிககொணடு வணிகா பலாிருநதனர். அவா களைக கணட ஆலிநாடா ஆனநதஙகொணடு, வணிகா தலைவனை நோககி "வணிகா தலைவரே! நாஙகள இககடலைததாணடி அககரையிலுளள ஒரு தீவிறகுச செலலவேணடி யீணடடைநதோம. இதுபோழுது தஙகள மரககலஙகளும வட கரைககு வாணிபததின பொருட்டுச செலலும போல தோனறுகினறது. தாஙகள அருளபுரிவீ ராலை நாஙகளும இம்மரககலததிலேயே யேறிச சென்று எஙகள காரியததையும இனிது முடிப போம" என்று வேணடினா.

ஆலிநாடா வாாததையைக கேட்ட, வணி கா தலைவன மனமிரஙகி அவாகளை அமமரககலத திலேயே யேறுமபடி அருளபுரிநதனன. அநு மதி பெறற அவவைவருமு மரககலமேறிப பன னுள கடலிலேயே சென்று பினனா வடகரையைய டைநதனா. அடைநததும அமமையாா கூறிய வணணமே வடகிழககு மூலையை நோககி மூனறு பகறபொழுது விடாது நடநதுசெனறு, மலையைய யடைநது, அனறிராபபோழுதை அமமலையிலே கழிததனா. பினனா பொழுது புலாநததும நாடா எழுநது அமமலைககப்பால பததுககல தூரததே

யுள்ள கம்பியன் அரண்மனையைத் தேடிக் கண்டு பிடித்து அதனுள்ளே புகுந்தனர்.

அச்சமயம் கம்பியன் உணவருந்திக் கொண்டிருந்தனன் அதை யறிந்த ஆலிநாடர் வெளியே வந்து முன்றிலில் நின்றுகொண்டு யாதும் அறியாதவர்போல கம்பியனுக்குக் கேட்கும்படி தன் நண்பர்களை நோக்கி "நண்பர்களே! நாகைப்பதியில் விளங்கும் புத்தர் கோயிலைச் சிறப்புறவமைத்த சிற்பி இவ்வரண்மனையில் உள்ளவனே அக்கோயிலையும், விமானத்தையும், பொற்சிலையையும் செய்து முடித்தற்கு இவன் கைக்கொண்ட முயற்சியெல்லாம் பயனிலாதொழிந்தன இவனுக்குப் பொருள் கொடுத்து வேலையைச் செய்வித்த அரசன் புகழும் பணமும் விளங்கா தொழிந்தன. ஐயோ! பாவம்! இவன் அப்பொற்சிலை இவ்வளவு சீக்கிரத்தில் கள்வர்கள் வசப்படுமென்று கனவிலும் நினைத்திரான் குலாலனது சக்கரத்தைப் போல சுழலும் அச்சக்கரத்தை நிறுத்தி அப்பொற் சிலையைக் கவர்ந்து சென்ற கள்வனது புத்தி கூர்மையும் நெஞ்சத்துணிவும் இருந்தவாறென்னே! இச்செய்தியை இச்சிற்பி கேள்வியுற்றால் அவன்றாவி உடலிலே தரித்திராதே இனியென் செய்வது" என்று மிகவும் வியப்புற்றவர் போல நடித்துக் கூறினர்.

இவ்வவைவரும் இவ்வாறு முன்றிலில் நின்று வார்த்தையாடிக் கொண்டிருக்கும் பொழுது கம்பியன் உணவை யுண்டு விரைவில் வெளியே வந்தான். வந்தவன் வெளியிற் சிலர் நின்று கொண்டு தன்னைப்பற்றிக் கூறும் மொழிகள் தன் காதிற் பறையறைந்தாற்போற் படவே அம்மொழிகளை வீட்டினுட்புறமிருந்தே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். அவர்கள் கூறிய வார்த்தைகளால், தான் நாகைப்பதியிலமைத்த புத்தர் கோயிலின் இயந்திரசக்கரத்தைத் திருத்திய பொற்சிலையைக் களவர்கள் கவர்ந்து சென்றார்க ளென்றும், அதனால் தன்னுடைய தொழிலும் அரசன் பொருளும் வீணாயின வென்றும் அறிந்தான்.

அறிந்த அவன் துக்கத்திலாழ்ந்து, வெளியே வந்து அங்கு நிற்கும் ஆலிநாடர் முதலிய ஐவர்களை நோக்கி "பாகவதர்களே! உங்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்தவர்கள் யார்? யான் அந்நியர்கள் அறியா வண்ணம் ஜலதாரையின் கீழ்க்கல்லினுள்ளே அமைத்து வைத்திருந்த இயந்திரத்தின் சூத்திரத்தைக் கண்டுபிடித்துக் களவாடியவன் மிகவும் கெட்டிக்காரனாகத்தான் இருத்தல் வேண்டும். இதுகாறும் நான் அடைந்த பேரும் புகழும் இன்றோடு கழிந்தன

இனியென் செய்வது" என்று வாய்விட்டுக் கதறியழுது வருந்தினன்

அப்போது மங்கை மன்னன் அச்சிறுபிள்ளை நோக்கி "கற்றாழ்ற்றோன்று கழிவிரக்கம்" என ஆன்றோர் அருளியதை நீர் அறிந்திருந்தும்; இதற்காக நீர்வருந்துவது முறையன்று அறிவிற் பெரியோராகிய நீவிரே சென்றதைக் குறித்துக் கன்றுவீராயின் மற்றையோர் அடையும் வருத்தத்தைக் கூறவும் வேண்டுமோ?" எனப் பலவித வார்த்தைகள் கூறி உபசரித்து மனந்தேற்றி அந் நிலைவிட்டுத் தன் நண்பர்களுடன் புறப்பட்டனர்.

பின் பெரிய பெருமாள் நியமித்த பணியை நிறைவேற்றுதலிலேயே நாட்ட முடையவராய ஆலிநாடர் நாகப்பட்டினத்துச் செல்லவெண்ணி, கடற்றுறைமுகத்தை அடைந்தனர், அங்கு நாகை யம்பதிக்கு வியாபாரத்தின்பொருட்டு மரக்கலத் திலே பாக்கை ஏற்றிக்கொண்டிருக்கும் வியாபாரி ஒருவனைக் கண்டார். கண்டதும் ஆலிநாடர் அவனை யடைந்து "வணிகரே! நீர் சரக்கேற் றிச் செல்லும் மரக்கலத்திலே தமை கூட்டத்து எம் மையும் ஏற்றி அக்கரைக்கு அழைத்துச் செல்வீ ராக" என்று வேண்டினார் வணிகனும் பரகாலர் கூறிய வார்த்தைகளாலும், அவரது நடையுடை

பாவனையாலும பரம பாகவதரென நினைதது அவருடைய நணபாகளுடன அவரைத தன மரககலததிலேற்றிக கொணடான

மரககலமேறிய ஆலிநாடா இவவணிகனை நாம எவவாறாயினும வஞசிதது இவன பொருளைப பெற வேணடுமெனக கருதி கொடடைப பாக கொனறை எடுததுச சீவிப பாதியாககி வணிகனிடமீநது " இபபாககை உமது பாககுடன சோததுககொணடுவநது கலம் அககரையை அடைநததும திருபபிக கொடுபபீராக " என்று வேணடி நினறனா

வணிகனும ஆலிநாடா வஞசகக கருததை அறியாதவனாய அபபாககைவாஙகித தமது பாககு மூடடையொனறில அதனைச சோததுக கட்டினான சிறிது பொழுது கழிநததும ஆலிநாடா வணிகரை நோககி, " ஐயா! வணிகரே! உமமுடைய சரககில நானும பாதிப பாககுச சோததிருககிறேன கலம கரையை அடைநததும என்னிடம அபபாதிப பாககைத திருபபிககொடுபபதாக மூறிச சீடடொனறு எழுதிககொடும, இனறேல நான கொடுதத பாதிபபாககை இபபோழுதே திருபபிககொடும " என்று மனறாடினா

இவ வாாததையைக கேடட வணிகா தலைவன தனனுடைய ஆயிரக கணககான மூடடை

களில அவா கொடுதத பாககை வைதத மூட்டையை வெகுநேரம தேடியும கணடறியாதவராய இனி இவவாறு தேடிககொணடிருபபின கலம கரையை அடையக காலதாமதமாகுமெனக கருதி, அவா கேட்ட வாசகததின உடகருததையும நய வஞசகததையும அறியாது கேட்டவாறே "என் கபபலிலே பாதிய பாகது உமது" எனறு எழுதிக கொடுததான சிறிது நேரததில கபபலும புறப பட்டுச சினனுட்களுள நாகபபட்டினத துறை முகத்தை அடைநதது

கலம கரையை அடைநததும ஆலிநாடா வணிகனை அணுகி "வணிகரே! உமது சரககினினறும எனககுச சேரவேணடிய பாகததைககொடும" என்று கேட்டனா அவ வாாததையைக கேட்ட வணிகன தம்முடைய பாககில ஆலிநாடா சோத திருநத பாககின பாதிததுணடை வருநதித தேடி யெடுததுக கொடுததனா பரகாலா அதனைப பெற றுககொளள மன மிலலாதவராய வணிகரை நோககி "ஐயோ! செட்டியாரே! நீா எமககு எழுதிக கொடுதத உடனபடிககையினபடி நடநது கொளளக கடமைபபட்டிருககினறீா அவவுடனபடிக கையினபடி உமது பாககில பாதிபபாககனறோ எனககுச சேர வேணடும? அபபடி யிருககக நீா ஒரு துணடு பாககை எடுததுககொடுதது எனனை

ஏமாறறப பாாககினறீரோ ? இஙகிருககும் பூராப பாககில பாதியைக கொடுததாலனறி நான உம மைச சுமமா விடேன இபபோதே உமமை நீதி மனறததிறகு இழுததுச சென்று அரசனுணைககுட படுததுவேன நீர கொடுதத இசசீட்டை வாஙகி இன்னும ஒரு முறை படிததுபபாரும்" என்று சொலலி அடா வழககாடத தொடஙகினர்

இவவாாததைகளைக கேடட வணிகன மிகக கோபஙகொணடு ஆலிநாடடனை நோககி "அடா வழககிடடு என பொருளை அபகரிகக எணணும் அறிவிலாதவனே! உனனைக களவனென யானறி 'வேன பாாவையில, பசுவையும, செயகையில 'சீபததையும போனற உன்னை வேடததினுல பக வான அடியவனெனறு நினைதது மோசம 'போனேன நீ முறிசசீட்டு கேடட காலததே உன வஞசகததை யான அறிநதிருபபின அப போதே கலததிலிருநத உனனைக கடலில வீழததி யிருபபேன இனிககூறிபபயனென ? கடவு ளருளால நீ உயிாபிழைததாய" எனககூறினா

இஙஙனம இவவிருவரும் ஒருவாககொருவா வழககிடடுக கொளவதை, அததுறைமுகதது விபா பாா நிமிததம கபபலிலேறவநதவருமு, கபபலி னினறு இறஙகிபவருமாகிய பல விபாபாரிகள அறிநது சமீபததில வநது அவவிருவா வழக

கையும விசாரிததுக் கேடடறிந்தனா பின அவா களில ஒருவா பாககு வியாபாரியை நோககி "ஐயா! நீா வீணே வழககிடுவெது தவறு ஆலிநாடாககோ எழுதது பல யிருககிறது அதுவும நீா கைபபட எழுதிககொடுதத முறிசசீடடு ஆதலால அமமுறிச சீடடினபடி இககபபலினறு இறககியிருககும பாக கில பாதியை நீரும, பாதியை ஆலிநாடரும அடைதலே உரிமை" எனறு கூறினா

இவவாாததையைககேடட பாககு வியாபாரி மனம நொநது யாதொனறுஞ சொலல நாவெழா தவராய அபபாதி பாககிறகுரிய பொருளைப பர காலாககீநது தனனிருபபிடம செனறான. பர காலா பாககு வியாபாரிகொடுதத திரவியததை பெறறு தம தோழாகள நாலவருடன நாகையம பதி யைநோககிச செனறனா

---

எடடாவது இயல

## தஞசிரததாற புததாசிலையை வசபபடுததல

நாகையமபதியை அடைநத ஆலிநாடா அஙகு கணடோா வியபபுறும வணணம மிகவும அழகாய அமைககபபடடிருநத புததராலயததைக கணடுறறனா கணடுறறவா அககோயிலின வேலைததிறததினையும, அழகினையும அமைவுறக

கண்டு ஆனந்தங்கொண்டனர், பின் அதனுள் ஆடகத்தால் அமைக்கப்பட்டிருக்கும் புத்த விக்கிரகத்தை எவ்வாறு கவர்ந்து செல்வதென்று தமது மனதிற்குள்ளே யோசித்துத் துயரக் கடலுள் ஆழ்ந்தனர் பின்னர் ஆலிநாடர் ஒருவாறு தேறி இராப்போழ்து வரும் அமையத்தை யெதிர் நோக்கி யிருந்தனர் அப்போது,

"வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய விரிகதிரோன் வெற்பு"

பின் நள்ளிருளானதும் ஆலிநாடர் தம் நண்பர்களையும் சீடர்களையும் உடன் அழைத்துக்கொண்டு, அப் புத்தராலயத்தினுள்ளே புகுந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு வேலைப்பாடுகளின் திறத்தையும் கண்ணுற்று அதிசயித்தனர் அப்போது அக்கோவிலில் எழுந்தருளியுள்ள புத்த தேவருக்குப் பூசனைபுரியும் காலம் சமீபித்ததால் அக்கடவுளைப் பூஜிப்போன் உள்ளே புகுந்து பூசனைபுரிய ஆரம்பித்தான் அச்சமயம் யாவரும் அறியா வண்ணம் நம் ஆலிநாடர் முதலோனோர் அக்கோயிலின் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருந்தனர் பூசாரி பூசையை முடித்துக்கொண்டு கோயிற் கதவைத் தாளிட்டுத் தன் இல்லத்திற்குச் சென்றான்

இங்ஙனம் பிறரொருவரும் அறியா வண்ணம் தோழர்களுடன் மறைந்திருந்த ஆலிநாடர் நள்ளிருளானதும் அவ்விடத்தைவிட்டு வெளியே வந்தனர். வந்ததும் கம்பியனால் கூறப்பட்ட இயந்திரத்தின் சூத்திரத்தைக் கண்டுபிடிக்கக் கவலையுடையவராய்க் கோயிலின் உட்புறத்தே நாலா பக்கமும் சுற்றித்திரிந்து கோமுகை யொன்றைக் கண்டு பிடித்தனர்.

அதுதான் புத்த தேவருக்கு அபிஷேகம் செய்யும் ஜலமானது உள்ளேயிருந்து வெளியே வரும் ஜலதாரை. கம்பியன் இயந்திரத்தின் சூத்திரத்தை யாவரும் அறியாவண்ணம் ஜலதாரையின் கீழே கல்லினுள்ளே அமைத்து வைத்திருந்ததேனென்ன ஆலிநாடரிடம் கூறிய ஜலதாரையும் இதுவே. இதன் உட்புறத்தேதான் இயந்திரத்தின் சூத்திரமும் அமைக்கப்பட்டிருந்தது. கோமுகையைக்கண்டதும் ஆநந்தங்கொண்ட ஆலிநாடர் அதனுட்புறத்தே உற்றுநோக்க இரும்பாணியொன்று சங்கிலியுடன் அதனுள் அமைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றனர், உடனே தன் தோழர்களைத் துணையாகக்கொண்டு அக்கோமுகையின் மேற்புறமுள்ள கற்களைப் வெளிப்படுத்திப் பின் அச்சங்கிலியைப் பிடித்திழுத்து அவ்விரும்பாணியை அதனுட் புறத்தினின்றும் வெளிப்படுத்தினர்

பின சிறிது நேரததில விமானததின் மீதேறி அதன வழியாயப புததசசிலை யிருககுமிடம சென்று, அபபொற சிலையைக கவரத தீர்மானஞ கொணடனர

ஆயினும், ஆலிநாடர தாம எணணியவாறு உளளே செலல வழியிலலாததால பெருமூச செறிநது மதிமயஙகிச சோர்வுற்று "இனிச்செய வது யாது" எனப பரநதாமன பாதாரவிநதஙகளை மனததுட கொணடு,

> "பாயிரும பரவைதனனுள பருவரை திரிதது வானோரக
> காயிருந தமுதம கொணட அபபனை எமபி ரானை
> வேயிருஞ சோலைசூழநது விரிகதி ரிரிய நினற
> மாயிருஞ சோலை மேய மைநதனை வணஙகி னேனே"

எனததுதிததனர அபபொழுது எமபிரான திருவருளால "விமானததின சிகரததில சககர வடிவமாய அமைநதுளள ஓர இயநதிரம குலா லனது திகிரியைபபோல அதிவேகமாயச சுழனறு கொணடிருககும அவவியநதிரததை நிறுததினறுன புததச சிலையிருககுமிடம புகமுடியும்" என முனனர தமககு அமமையார கூறிய இரகசியம அவர மனதிலுதிததது உடனே ஆலிநாடர அவவியநதிரம சுழலாமலிருகக ஏதேனும ஓர உபாயம செயயவேணடுமென ஆவலுடையவ ராயச சிறிது நேரம சிநதிககலாயினர

பினனா ஆலிநாடா நணபாகளைத தமமருகே வரவழைதது அவாகளை நோககி, "நணபாகளே! இவவியநதிரததை நிறுததினோமான நாம உளளே சென்று பொறசிலையைக கவரமுடியும இனறேல நம்மால இயலாது ஆயின இவவியநதிரததை அசையாமல நிறுதத வழியொனறேயுளது அஃ தியாதெனில இபபொழுது இநநகரிலுளளவா யாவருமே அறியாவணணம வாழைத தோடடததி லுளள மரஙகளை வெட்டிவநது, அததணடுகளை இயநதிரததின சககரததினிடையே கொடுததுக கொணடு வநதால, அததணடிலுளள நாரெலலாம அதன பறகளில சிககிககொணடு அசசககரம சுழ லும வேகஙகுனறி அசையாது நிறகும அப போது தான உளளே நுழைநது நாம எணணிய வாறு காரியததை முடிததுக கொளளலாம" என றாா

இவ வாாததையைககேடட நணபாகளும சீடாகளும அஙஙனமே செயய வெணணங கொணடு வாழை மரஙகளை வெடடிச்சாயதது அததணடுகளைக கொணடுவநது கொடுததனா ஆலிநாடா நணபாகளால கொடுககபபடட வா ழைத தணடுகளை பெறறு அநத இயநதிரததின சககரததினிடையே கொடுததுக கொணடு வநத னா சிறிது நேரததில வாழைத தணடிலுளள

நாரெல்லாம் அச்சக்கரத்தின் புறங்களில் சுற்றிக் கொள்ள அது அசையுந் திறனற்றுச் சுழலாமல் நிலைபெற்று நின்றது.

பின் ஆலிநாடர் தம்சீடர்களுள் வல்லானொரு வனை நோக்கி "நீ உட்புகுந்து அங்கு ஆடகத் தால் அமைக்கப்பட்டுள்ள புத்த விக்கிரகத்தைப் பெயர்த்தெடுத்து வருவாயாக," என்று கட்டளை யிட்டு அவனை அக்கோயிலின் உள்ளே அனுப்பி னார். தலைவன் ஆணையைத் தட்டாது நடக்கும் அச்சீடன் உள்ளே புகுந்து அச்சிலையை நிலையி னின்றும் பெயர்த்தெடுக்கத் தொடங்கினான்.

அச்சிலை மந்திர வலியால் அவன் கைக் கப்படாது நாற்பக்கமும் அக்கோயிலுக்குள் ளேயே ஓடத் தலைப்பட்டது. அவனும் அவ்விக் கிரகத்தைக் கைக்கொள்ள அதன் பின்னேயே விடாது நாற்பக்கமும் சுற்றித்திரிந்தான். சுற் றித்திரிந்தும் தன் முயற்சி பலியாததைத் தலைவ ராய ஆலிநாடர்க்கறிவிக்க, பரகாலர் அப்பொற் சிலையைக் கைப்பற்றுதற்குச் சாதனமாய ஓர் உபா யத்தை வெளிப்படுத்திருந்தே அறிவித்தனர். அதை யறிந்த சீடன் அவ்வுருவத்தை அபரிசுத் தமாக்கி, அதன் மந்திர வலிமையைப் போக்கித் தன் வசப்படுத்தினன். வலிகுன்றிய பொற்சிலை அப்போது,

“எய்த்தா ராகாதோ ? இரும்பிணி லாகாதோ ?
பூய்த்தால் மிக்கதொரு பூத்தா லாகாதோ ?
தேய்ந்தே பித்தரோடு செம்புகளா லாகாதோ ? [கே ?”
மாய்ப்பொன் வேணுமோ மதித்தென்னைப் பண்ணுகைக்

என்று, புலம்பிக்கொண்டு ஒருசார் கீழே விழுந்திட்டது. உடனே ஆலிநாடர் சீடன் அப்பொற்சிலையைக் காலதாமதஞ் செய்யாது எடுத்துக் கொண்டுவந்து தம் தலைவரிடம் கொடுத்தனன்.

பரகாலர் அதைப்பரிவுடனேற்று அதைக் கண்டேனும் அங்கு தங்காது தம் நண்பர்களுடன் அந்நகரைவிட்டுப் புறப்பட்டனர். சிறிது தூரம் செல்லவே பகலவன் தன் கிரணங்களைப் பரப்பி இருளை நீக்கும் அமையம் வந்துற்றது.

அதையறிந்த ஆலிநாடர் முதலானோர் சமீபத்திலுள்ள ஒரு சிற்றூரை யடைந்து தாம் களவாடிக் கொணர்ந்த பொற்சிலையை அவ்விடம் பிறரறியாவண்ணம் பத்திரப்படுத்த வெண்ணினர். அங்கு மனிதர்கள் சஞ்சரித்துக்கொண்டே யிருந்தமையால் பத்திரப்படுத்த முடியாதென்று வெண்ணிச் சமீபத்திலுள்ள கழனிக்குச்சென்று அங்குச்சேறும் நீருமாய்க் கலந்துள்ள ஒரு கழனியில் தாம் கொணர்ந்த அவ்வாடகச்சிலையை ஆதித்தன்தோன்று முன்னே புதைத்து வைத்தனர். சிறிது நேரம் தாழ்ந்ததும்,

"பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுதம் முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப"

ஆதித்தனும் அழகுறக் கிழக்குக்கடலிலே தோன்றினன். அச்சமயம் மாரிக்காலமானதால் எங்குப் பார்த்தாலும் உழவர்கள் கழனிகளில் உழுவதும், பரம்படிப்பதும், பயிர் நடுவதும், களைபிடுங்குவதுமாயிருந்தார்கள். அந்நிலத்திற் குரியோனும் அன்றுதன் நிலத்தைப் பரம்படிக்க வெண்ணிற மாடுகளை ஓட்டிக்கொண்டு கழனியை வந்தடைந்தான். அதையறிந்த ஆழ்வார் நாம் இனிச் சும்மா இருத்தல் தகாது. இருப்போமாயின் நம் களவைப் பலரறிய இவன் வெளிப்படுத்துவான். வெளிப்படின் நாம் எண்ணிய வெண்ணம் முடிவுறாது! ஆதலால், களவு வெளிப்படாமலிருத்தற்கு யாதேனும் ஓர் உபாயந் தேடவேண்டுமென மனத்துட்கொண்டு அவ்வுழவனைக் குறுக்கிட்டு "ஐயா! நீ யார்! இங்கு வரக் காரணமென்னை?" என்று வினவினார்.

அவ்வார்த்தையைக் கேட்ட உழவன் "பெரியோரே! நான் இந்நிலத்திற்குரியவன். இதைப் பரம்படித்துச் சமப்படுத்தி நெற்பயிர் நடலாமெனக்கருதி ஈண்டு வந்தேன்" என்றனன்.

ஆழ்வார் அவனை நோக்கி, "உழவனே! நீ என்ன சொன்னாய்? இன்னும் ஒருமுறை அவ-

வாறு சொல்லுவையேயாயின் உன்னுடைய நா இரண்டாய்ப் போமென்பது நிச்சயம். இந் நிலம் என்னிலமென்பதை நீ அறியாயோ? என்னிலத்தை என் உத்தரவின்றி நீ எவ்வாறு பரம்படிக்க முன் வரலாம்?" என்று, கடிந்து பேசி அவனைப் பரம்படிக்க விடாது தடுத்தனர்.

இங்ஙனம் ஆழ்வார் கூறிய வார்த்தையைக் கேட்ட உழவன் 'இடியோசை கேட்ட நாகம் போல்' நடு நடுங்கி "ஐயா! நீர் யாவர்? உம்முடைய ஊர் யாது? நீர் இங்கு வரக் காரண மென்ன? அயலூர் பிடாரி வந்து உள்ளூர் பிடாரியைமுடுக்கின்றபோல், நீர் என்னிலத்தில் வந்து நின்று கொண்டிருப்பது மன்றி இந்நிலத்தையும் உம்முடையதென்று கவரப்பார்க்கின்றீரோ? உம்மை இங்கு நான் கண்டதும் இந்நிலத்தை விட்டு அப்புறப் படுத்தாமல் சும்மா விருந்ததால் இவ்வாறு நேர்ந்தது. 'உட்கார இடங்கொடுத்தால் படுக்க இடங்கேட்பான்' என்பது உன்னிடத்தில் சரியாய்ப் போயிற்று" என்று கூறி ஆழ்வாரைப் பொருட்படுத்தாமலே உழவன் தன் நிலத்தை உழுது பரம்படிக்க முயன்றான்.

உடனே ஆழ்வார் மிக்க கோபத்தோடு தன் நண்பர்களையும், சீடர்களையும் நோக்கி, "ஓ நண்பர்களே! இவ்வுழவன் நம்முடைய விளை நிலத்தை

அவனுடைய விளை நிலமென்று கூறிக் கைப்பற்ற எண்ணித் தன் மேழியைப்பூட்டி உழ ஆரம்பிக்கின்றான். இனிச் சும்மாவிருத்தல் தகாது!" என்று கூறினார்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்ற மறை மொழியை மனத்துட்கொண்டு நண்பரும், சீடரும் தலைவர் கூறிய மொழியினாலும், முகக்குறிப்பினாலும் அவரது அகக் குறிப்பை யறிந்து உழவனிடம் சென்று அவன் பூட்டிய ஏரை ஒடித்துச் சின்னாபின்னமாக்கி நாலாபக்கமும் வீசி யெறிந்தனர். தன் கலப்பையைச் சின்னாபின்னமாக ஒடித்தெறியவே அவ்வுழவன் கூக்குரலிட்டு ஆழ்வார் முதலானவர்களோடு போராடத் தொடங்கினான். அதனால் இருதிறத்தார்க்கும் விவாதம் மூண்டது.

பரகாலரென்ப் பெயரேற்ற நம் ஆலிநாடர் இதற்கஞ்சுவரோ? சிறிதேனும் அஞ்சாதவராய் அவனை நோக்கி "நீ இந்நிலத்தை உழுது பயிரிடச் சிறிதும் நான் சம்மதியேன். இந்நிலமோ என்னுடையது. இதையறிய விரும்பின் நாளையதினம் இங்கு வந்தால் பத்திர மூலமாக நிரூபித்துக் காட்டுகின்றேன்" என்று கூறினார்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட புலத்திற்குடை-
யோன் ஆலிநாடரிடம் அடாவழக்கிட்டு அவதிப்
பட்ட மனமிலாதவனாய் அவரை நோக்கி "ஐயா!
உம்மிடத்திலோ ஆள்பலமிருக்கிறது; என்னி
டமோ அஃதில்லை. இவ்வண்ணமிருக்க, நான் உம்மி
டத்தில் வீணே வழக்கிட்டுக் கொண்டிருந்தால்
எனக்குத்தான் மிக்க கெடுதியுண்டாகும். ஆதலால்
நீர் கூறுவது போலவே நாளையதினம் இங்கு
வருகின்றேன். அச்சமயம் உம்முடைய வார்த்
தையின்படி இந்நிலம் உம்முடையது தானென்ப
பத்திர மூலமாக நிரூபிக்காவிடின் இஃது என்னு
டைய தென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை"
என்று கூறித் தன் மாடுகளை ஓட்டிக்கொண்டு
கழனியை விட்டுத் தன் சிற்றூரை யடைந்தான்.

பின்னர் ஆழ்வார் தாம் எண்ணிய எண்
ணத்தை முடித்ததற்கும், உழவன் அறியாமைக்
கும் மிகவும் நகைத்து அன்று பகற்பொழுது
முழுதும் அக்கழனியிலேயே தங்கியிருந்தனர்;
பின் இராக்காலம் வந்துற்றதும் அச்சிலையை
அந்நிலத்தினின்றும் பெயர்த்தெடுத்துக்கொண்டு
பகலவன் தன் கிரணங்களைப் பாரின்மீன் பரவச்
செய்முன் தமது தோழர் முதலானவர்களோடு
அவ்விடம் விட்டகன்று, திருவரங்கமடைந்து
அப்பதுமையைப் பிறரறியா வண்ணம் பத்திரப்
படுத்தி வைத்திருந்தனர்.

## ஒன்பதாவது இயல்

### புத்தச்சிலையால் புதுப்பணி புரிதல்

இஃதிங்ஙனமிருக்க நாகையம்பதியில் பொழுது புலர்ந்ததும் புத்தராலயத்திலுள்ள பொற்சிலை அன்றிரவு கள்வர்களால் கவரப்பட்ட செய்தி அந்நகரத்தின் நாற்றிசையும் பரவியது. இதனை யறிந்த அந்நகரவாசிகள் யாவரும் வியாகூலத்தையும், வியப்பையும் ஒருசேர அடைந்தனர். அன்று பகற்கால முழுதும் மனிதர்கள் வீதிகளில் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டு "சென்ற இராப்போழ்து நம் புத்தராலயத்தில் நுழைந்து பொற்சிலையைக் கவர்ந்து சென்ற கள்வனே கள்வன்! அக்கோயிலின் கோபுரத்தின்மீது இடைவிடாது சுற்றிக்கொண்டிருக்கும் யந்திர சக்கரத்தைச் சுழலாமல் நிறுத்திக் கோயிலினுட்புகுந்த அக்கள்வனது நெஞ்சத்துணிவே துணிவு! அவன் புத்தி கூர்மையே கூர்மை" என்று பேசிக் கொண்டிருந்தனர்.

அந்நகர பரிபாலகரோ "இப்பொற்சிலையைக் கவர்ந்து சென்ற கள்வனை எங்ஙனமாவது கண்டு பிடித்துத் தண்டித்து மீண்டும் அப்பொற்சிலையைப் பெறவேண்டும்" என்னும் எண்ணமுடையவராய் எண்டிசையும் சேவகர்களை அனுப்பிக் கள்

வினைக கணடுபிடிககச செயதனா சேவகாகளும தலைவா ஆணையினபடி புலம விசாரிததுக கொணடு களவரைத தேடிசசெனறனா.

இவாகள செலலுமபோது இடைவழியிற சநதிததோரால களவாகள சென்ற வழியை யறிநது அவவழியே இவாகளும பின தொடாநது செலலலாயினா மறுநாள மாலைபபோதில இவாகள இரணடாறறிறகு மிடையே ஊரொனறைக கணடனா அதுதான திருவரஙகமெனனும திருபபதி அவவூரிலேதான ஆடகசசிலையைப பிரறறியாது கொணாநத நம ஆலிநாடரும அவரது நணபாகளும தஙகியிருநதனா ஊரினைக கணடதும காவலாளா கடிதில அதனுடபுகுநது, களவரையும, அவரது நணபாகளையும அநநகரின ஒவவோரிடஙகளிலுஞ சென்று தேடலாயினா தேடினவா ஓரிடததில ஆழவாரையும, அவரது நணபாகளையுங கணணுறறு "ஐயா! நீஙகள புததாலயததுள நுழைநது கவாநது வநத கனகசசிலையை எஙகே வைததிருககினறீாகள? அசசிலையைக காலநதாழககாது கடிதிலீயின நீவிா அனைவரும ஆவிபெறறுயவீாகள! இனறேல, எம தலைவரது தணடனைககுடபடடுத தலையை இழகக நேரிடும" எனறு கடுஙகோபங கொணடு கடுமொழிகளைக கழறலாயினா.

அஞசா நெஞசையும, பரகாலனெனப பெய ரையும, படைதத நம ஆலிநாடா அவாகள கூறிய வாாததைதயைச சிறிதேனும மதியாதவராய அவாகளை நோககி "ஓ! மதியிலிகாள! நீவிா கூறிய வாாததைகடகு உமமைப பொருடபடுத திப பதிறகூற என மனமிசையவிலலை உம தலை வரே யிணடு வநது எமமைககேடபின அதறகுத தககவிடை அளிபபோம. நீவிா வநத வழியைப பாாததுககொணடே விரைவில நும நகாககேக லாம இலலாது காலநதாழபபின நீவிா கூறிய வாாததையின பயனை நீவிரே யடைதல திண ணம" எனககூறினா

பரகாலா வாாததையைபபெறற பணியாளா அநத நகரைவிடடு விரைவில நாகைபபடடி நணணித தஙகள தலைவாிடம களவாகளைததேடிச சென்று கணடுபிடிததுப பொறசிலையைக கொடுககு மாறு தாஙகள கேடடதையும, ஆலிநாடா அதற குககூறிய பதிலையும ஆதியோடநதமாக அறி விததனா

சேவகா கூறிய வாாததைகள தம செவியிற புகவே நாகைபபடடித தலைவாகள "எரிகிற சுவா லையில நெய பெயததறபோல" கோபங கொண டெழுநது "நம கனகசசிலையைக களாநது சென றதுமலலாமல இவவாறு சொல்லவும அவனுக

குத துணிவுணடாயதா? 'மூாககனு முதலியுங கொணடுவிடா' ஆதலால இவனை எஙஙனமா வது பிடிததுத தணடிதது நம கனகச சிலையைக கைபபறற வேணடும இனறேல, நம நாடடில களவென னுந தீததொழில நாளுககு நாள தலை சிறநதோஙகும" எனவெணணித தாஙகளே சென று திருவரஙகமடைநது களவாகள இருககு மிடததைக கணடுபிடிததனா

பின களவா தலைவனாய விளஙகும பரகாலனை நோககி "களவா தலைவனே! அநநியாகள அறி யாவணணம அநேக நாள முயனறமைதத இயந திர ரகசியததை நீ எவவாறறிநதாய? திகிரியை திருதத நீ கணடு பிடிதத உபாயததை நினைககின எஙகள மனமே திகைககினறது ஆடகசசிலை யமைகக நாஙகள அளிதத பொருளோ அளவிறந தன ஆலயததை அழகுறசசெயது முடிககக கம மியன அடைநதகஷடமோ அளவிறநதன இவற றையெலலாம நீ ஒருவன தோனறி வீணாக கினாய! 'செயவது பலநாள அழிபபது ஒருநாள' என்ற பழமொழி உனனிடததில மெயயாயிறறு இனி அதைக குறிததுப பேசிபபயனென" எனக கூறி "நீ கவாநது வநத கனகச சிலையைக கடி தில ஈவாயாக!" எனககேடடனா

இங்ஙனம நாகைபபட்டினத தலைவாகள கூறிய வாாததையைககேட்ட ஆலிநாடா "ஐயா ! நாஙகள நாகைபபதியிலிருநத ஆட்கச சிலையை அபகரித தது உணமையே, அதைக கைவசபபடுததத நாங களசெயத முயறசிகளோ பல அதனால அடைநத கஷடமோ அளவிறநதன ஆதலால அச சிலையை இபபோதே உமமிடமீயோம இனியோ ராணடு கழிநத பினனா வநது கேடபீராயின கொடுபபோம" எனறு கூறினா

இதனைககேட்ட தலைவாகள ஆழவாரை நோககி "நீயோ எமது கனகச சிலையைக கவா நது வநத களவா தலைவன ஆதலால நீ கூறும வாாததையில நாஙகள எவவாறு நமபிக்கை வைப பது? நீ கூறுவதே போல நடபபதுணமையா யின உனது கையொபபமிடடுச சீடடொனறு எழு திதகொடு, இனறேல எமது கனகச சிலையைக கொடு" எனறு மனமுருகக கேட்டனா

அபபோது ஆலிநாடா "இசசமயம இவா களை எஙஙனமாவது ஏமாறறி அனுபபிவிடடு நாம காரியததை விரைவில முடிககஏறபாடு செயய வேணடும" எனவெணணி, அவாகள கூறிய வாாததைககு இணஙகினவரைபபோல நடிதது "நீஙகள ஓராணடு கழிநதபின எசசம யம வநது கேடபினும உஙகள பொறசிலையின

சிறுவிரலுககுக குறையாமல நாஙகள ஒபபுவிக கினறோம" என எழுதித தம தோழாகளுடன தாமுங கையொபபமிடடு அசசீடடை நாகைபபட பதித தலைவரிடம கொடுததனா சீடடைப பெறற தலைவாகள சிறிதேனும தாமதியாது நாகையம பதி நணண நடககலாயினா

பினனா, பரகாலா பரநதாமன திருபபணி புரியச சிறிதேனும தாமதியாது தாம கொணாநத கனகச சிலையை உருககி அபபொனனை விலைப படுதத எணணினா எணணியவா முனனா அசசிலையின சிறு விரலைத துணடிததுப பததிரப படுததி வைததுப பினனா பொறபணி புரியும கமமியரை அழைததுவநது அசசிலையைப பின னப படுததி விலைபபடுததி அளவிலாப் பொரு ளைப பெறறனா அபபொருளால திருமதிள முதற சிகரபரியநதமான கைஙகாயஙகளைச செயயப வெணணி கைததொழிலிற சிறநத கமமியா பலாககு அளவிலாப பொருளீநது அழைதது வநதனா

கமமியா தம முயறசியாலும, திறமையாலும "தெயவததசசனால அமைககபபடட தேவ விமா னமோ" எனறு கணடோரெலலாஙகூறிக களிககு மாறு பலவித வேலைபபாடுகளுடன கோயில,

விமானம், மண்டபம், மதில் முதலான திருப்
பணிகள் செய்து முடித்தனர்.

ஆழ்வார் இங்ஙனம் அரங்கநாதன் கைங்கர்
யங்களை அநுதினமும் செய்து வரவே ஒரு நாள்
மதில் கட்டுகிறபொழுது தொண்டரடிப்பொடி
யாழ்வார் திருமாலை, சோதத்துவந்தவிடம் நேர்பட
அதனை அழித்துக் குறுக்கில் மதில் கட்ட மனங்
கொள்ளாமல் ஒதுக்கி அம்மதிலைக் கட்டுவித்
தனர்.

இங்கு கோயிற்றிருப்பணிகள் யாதொரு
குறைவின்றி நிறைவேறுகிற, நாகைப்பட்டினத்
தலைவர்கள் ஆலிநாடர் தமது கைப்பட வெழுதி
அளித்த முறிச்சீட்டின்படி பொற்சிலை பெற
வெண்ணணி அவரிருக்கும் திருவரங்க மென்னும்
திருப்பதியை அடைந்தனர். பின் ஆலிநாடர்
இருக்குமிடஞ்சென்று அவரையும், அவர் நண்பர்
களையும் நோக்கி "நீங்கள் வரைந்தீந்த முறிச்
சீட்டின்படி ஓராண்டு கழிந்தும் பல நாட்களாயின
இனி, இன்று, நாளை, பின்னிட்டு எனத்
தவணைகள் சொல்லி நாட்கள் கழிக்க இயலாது.
இப்போது நீங்கள் பொற்சிலையைக் கொடாமலி
ருப்பீர்களாயின் உங்களைக் களவு செய்தோர்க்குரிய
தண்டனைக் குட்படுத்தித் தண்டிப்போம்" என்
றனர்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட ஆலிநாடர் அவர்களை நோக்கி "நீங்கள் பற்பலவாறு வாயில் வந்தபடி பிதற்றுவென்பயன்? நாங்கள் வரைந்து தந்த முறிச்சீட்டைக் கொண்டுவந்து திருப்பின் அதனைக் கொடுங்கள் அச்சீட்டின்படி உங்கட்குரியதை இப்பொழுதே கொடுக்கின்றோம்" என்று கூறினர்.

தலைவர்கள் தங்களெண்ணம் முடிவுற்றதென்றெண்ணித் தாங்கொணர்ந்த முறிச்சீட்டை எடுத்துப் படித்துக் காட்டினர். அவ் வாசகத்தைக் கேட்ட ஆலிநாடர் "நாங்கள் எழுதிக் கொடுத்திருப்பதே போல் உங்கள் பொற்சிலையின் சிறு விரலுக்குக் குறையாமல் அளிக்க யாதொரு தடையுமில்லை" என்றுரைத்துத் தம் நண்பர்களை நோக்கி அச்சிலையின் சிறுவிரலைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டனர். நண்பர்கள் அங்ஙனமே கொணர்ந்து நாகையம்பதித் தலைவரிடம் கொடுத்தனர்.

பொற்சிலையின் சிறு விரலைக்கண்ணுற்றதும் நாகையம் பதித்தலைவர்கள் திடுக்கிட்டு என்னே 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல் இருக்கிறது' பொற்சிலையைப் பெற்றுவந்த எங்களுக்கு ஒரு சிறுவிரல்கொடுத்து மோசஞ் செய்யப் பார்க்கின்றீர்கள் எங்கள் பொற்சிலையை உங்

களிடமிருநது பெருமல நாஙகள வீணை திருமபிச செலவோம உஙகளையும சுமமா விடோம" எனககூறி அவாகளை வருததத தொடஙகினா

பினை அறிவிற சிறநத ஆலிநாடா அவாகளை நோககி "இவவிவாதம நமககுள தீராது சில அறிவிற சிறநத பெரியோாகளை யழைததுவநது நம வழககைத தெரிவிபபடுததி அவாகள கூறும உறுதிமொழியினபடி நடநது கொளளுதலே யேறறது" எனறு கூறினா

அவாகள அதுவே சரியென ஒததுக கொணடு சில பெரியோாகளை அழைததுவநது, தம வழககைககூறி, ஆலிநாடா எழுதிககொடுதத முறிசசீடடையுங காணபிததனா முறிசசீடடைப பாாதது அதில எழுதியுளள வாசகததின பொருளை நனகுணாநத பெரியோா அவாகளை நோககி "பரகாலா கூறுவதே நியாயமாகும. சீட டிலும சிறு விரலுககுககுறையாமல கொடுபப தாகததான வரையபபடடுளளது ஆதலால அவா கொடுககும சிறு விரலைப பெறறுப போவ தேதான நியாயமாம" எனறு தஙகள உறுதியான வாாததையை வெளியிடடனா இவவாாததை யைக கேடட நாகைபபடடிததலைவாகள "நாம இனிச செயவது யாது?" என மனமிக நொநது ஆழவாா அளிதத புததசசிலையின பொற சிறு

விரலைப் பெற்று "திருடனைத் தேள் கொட்டினாற் போல" யாதொன்றுங் கூற நாவெழாதவராய்த் தம் நகர்க்கேகினர்.

---

## பத்தாவது இயல்

---

### ஆழ்வார் யோக நிஷ்டையிலமர்தல்

ஆழ்வார் அரங்கநாதன் ஆணையின்படி எல்லாத் திருப்பணிகளையும் குறைவின்றி முடித்த பின்னர் அரவணைச் செல்வன் அடி தொழுது அநுமதிபெற்று மீண்டு திவ்ய தேசயாத்திரை செய்யத்தொடங்கி, முதலில் உபமந்யுவுக்கும், பராசரருக்கும் பிரத்தியக்ஷமாயருள்புரிந்த திருப்பேர் நகரத்தையும் நந்திக்கும், சிபி சக்கரவர்த்திக்கும் காட்சி தந்தருள் புரிந்த நந்திபுரவிண்ணகரத்தையும், மார்க்கண்டேயருக்கும், பெரிய திருவடிக்கும், காவேரிக்கும், தர்மதேவதைக்கும் காட்சி கொடுத்தருள்புரிந்த திருவிண்ணகரத்தையும் அடைந்து ஆங்காங்கெழுந்தருளியுள்ள பெருமானைத் தொழுது பதிகம் பாடினர்.

பின்னர் திருநறையூரென்னும் திருப்பதியை யடைந்து அங்கு கோயில் கொண்டெழுந்தருளி யுள்ளவரும், தமக்குப் பரமாசாரியராயிருந்து திரு

விலாசசிலை பிரசாதித்தவருமாகிய நம் பெருமாளை விஷயமாக,

> "கண்ணுஞ் சுழன்று பீளையோடு ஈளை வந்தேங்கினால்
> பண்ணின் மொழியார் பைய நடமினென்னாதமுன்
> விண்ணும் மலையும் வேதமும் வேள்வியுமாயினார்
> நண்ணு நறையூர் நாம் தொழுதும் எழுநெஞ்சமே"

என்னும் பாசுரம் முதலாக நூறு பாசுரங்களை அருளிச்செய்து, அவரடிபணிந்து அளவிலா ஆனந்தமடைந்தனர்.

சின்னாட் கழிந்த பின்னர் ஆழ்வார் அந்நகரைவிட்டுப் புறப்பட்டுக் காவேரிக்குக் காட்சி தந்தருளிய திருச்சேறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தையும் உபரிசரவசு ராஜாவுக்கும், காவேரிக்கும், தாமதேவதைக்கும் பிரத்தியக்ஷமாயருள் புரிந்த திருவெழுந்தூரையும் வியாச மஹா முனிவருக்கும், வியாக்ரபாதருக்கும் காட்சி தந்தருளிய திருச்சிறுபுலியூர் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களையும் அடைந்து ஆங்காங்கெழுந்தருளிய எம்பெருமானைச் சேவித்து மங்களா சாஸனஞ் செய்து திருக்கண்ணமங்கையென்னும் திவ்ய க்ஷேத்திரத்திற் கெழுந்தருளினார். அங்கு, வருணனுக்கும், ரோமசருக்கும் பிரத்தியக்ஷமாயருள் புரிந்த பெருமான் சந்நிதி சென்று அவரைத் துதித்துப் பதிகம் பாடினார். அப்பதிகத்தில்,

" ஏற்றினை இமயத்துளெம் மீசனை
இம்மையை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத்தப்புறத் துய்த்திடும்
ஐயனைக் கையிலாழியொன் றேந்திய
கூற்றினைக் குரு மாமணிக் குன்றினை "

என, ஐந்தாவது செய்யுள் பாடித் துதிக்கையில் திருநின்றவூர் பத்தராவிப் பெருமாள் முன்பு ஒரு பாடல் பெற்றது போதாதென்று மீட்டும் என்னைப் பெற்ற அன்னையால் ஆக்ஞாபிக்கப்பட்டவராய் அத்தலத்து ஆழ்வாரெதிரில் வந்து காட்சியளிக்க ஆழ்வார்,

" நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினைக்
காற்றினைப் புனலைச் சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே "

என்று அச்செய்யுளின் ஈற்றில் அப்பிரானையும் திருக்கண்ணமங்கைப் பெருமானுடன் சேர்த்துப் பாடிப் பேரானந்த மடைந்தனர்.

அப்பால் ஆழ்வார் திருக்கண்ணமங்கையை விட்டுப் புறப்பட்டுக் கண்வமா முனிக்குப் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த திருக்கண்ணபுரத்தையும் பிருகு சைத்யருக்கும், கௌதமமுனிக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த திருக்கண்ணங்குடியையும் நாகராஜனுக்குப் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்த திருநாகையென்னும் க்ஷேத்திரத்தையு மடைந்து

ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பெருமானைத் தொழுது திருப்பதிகம் பாடினார். அப்பொழுது திருநாகைப்பட்டினத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சௌந்தர்ய ராஜன் ஆழ்வார் பக்திக்கு உவந்து பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்தனர். அப்போது ஆழ்வார் தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்கு அவர் வடிவழகை எடுத்துக்கூறும் துறையை அமைத்து,

"எண்டிசையும் எறிநீர்க் கடலும்
ஏழுலகும் உடனே விழுங்கி
மண்டியோர் ஆலிலைப் பள்ளிகொள்ளும்
மாயர்கொல்? மாயம் அறியமாட்டேன்
கொண்டல் நன் மால்வரையேயும் ஒப்பர்
கொங்கலர் தாமரைக் கண்ணும் வாயும்
அண்டத்தமரர் பணிய நின்றார்
அச்சோ ஒருவர் அழகியவா"

என, ஒரு பதிகம்பாடி, அப்பதிகத்தின் செய்யுட்களால் எம்பெருமான் வடிவழகை உலகோர்க்கு வெளிப்படுத்தி, சோழநாட்டை விட்டுப் புறப்பட்டுப் பாண்டி நாட்டை அடைந்தனர்.

அடைந்தவர் அங்கு புல்லாரண்ய மஹரிஷிக்கும், அசுவத்த நாராயணனுக்கும் பிரத்தியக்ஷமாய் அருள்புரிந்தவிடமும், ஸ்ரீ ராமபிரான் சமுத்திர ராஜனுக்கு வரங்கொடுத்த இடமுமாகிய திருப்புல்லாணியையும் சிவபிரானுக்குப் பிரத்தியக்ஷமாயருள்புரிந்த திருக்குறுங்குடி யென்னும் திவ்ய க்ஷேத்திரத்தையு மடைந்து கடவுளைத் தொழுது மங்களா சாஸனஞ்செய்து, சமீபத்திலுள்ள மலை நாட்டை அடைந்தனர். அங்கு கண்டார்கா

ணனுக்குக் காட்சி தந்தருள்புரிந்த திருவல்லவாழ் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து எம்பெருமானைத் தொழுதனர்.

பின்னர் ஆழ்வார் அங்கிருந்து புறப்பட்டுப் பாண்டி நாட்டடைந்து மலயத்துவச பாண்டியனுக்கும், தாம் தேவதைக்கும் காட்சி கொடுத்தருள் புரிந்த திருமாலிருஞ் சோலையையும் கதம்ப மஹரிஷிக்கும், இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷமாய் அருள் புரிந்த திருக்கோட்டியூரையும் அடைந்து ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பெருமானைத்தொழுது மங்களா சாஸனஞ் செய்தனர். மேலும் திருமாலின் அர்ச்சாவதாரங்களோடு விபவாவதாரங்களையும் கருதி உள்ளங் கரைந்து பல திருப்பதிகங்களைப் பாடிப் "பெரிய திருமொழி"யை முடித்தனர்.

முடித்தும் தமது ஆராதவன்பு அடங்காமையால் மற்றும் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் முதலிய ஐந்து பிரபந்தங்களை அருளிச்செய்து அநந்தரம் அரங்கத்துக் கெழுந்தருளி அரங்கநாதன் சந்நிதியில் திருநெடுந்தாண்டகத்தைத் தேவகானத்திற் பாடினர்.

அதற்குத் திருவுள முவந்த நம்பெருமாள் "உனக்கு வேண்டும் வரம் பெற்றுக்கொள்" என்று நியமித்தவளவிலே, நாலுகவிப்பெருமாள் "முன்பு தேவரீர் நம்மாழ்வார் மூலமாக வெளிப்படுத்திய தமிழ் வேதங்கள் நான்கையும் மார்கழி மாதத்திலே தேவரீர் கண்டருள்கிற அத்

திபபநோதஸவததிற கீரவாண வேதஙகளோடு பாராயணஞ செயயுமாறு கடடளை யிடடருளல வேணடும" எனறு பிராாததிகக, பெருமாள அஙஙனமே அருளபுரிநதார அவவாஞஞையினபடி ஆலிநாடா அனறு முதல அரசசா விகரக ரூபமான நமமாழவாரை ஆழவார திருநகரியினினறு கோயிலுககு எழுநதருளபபணணி உபயவேத பாராயணததையும ஒழுஙகாக நடககச செய்து, அததியயனத திருவிழாவைச சிறபபாகச செயவிதது, அது முடிநத பினனா பராஙகுசரை மீணடும திருககுருகூருககு எழுநதருளப பணணுவிததார

இஙஙனமே ஒவவோராணடும அததிருநாளைப பரிபாலிதது வருமபடி கடடளை செயதிடடு, மஙகையா கோமான, மகேநதிரகிரிககு அருகே சிததாசசிரமமெனறு பிரசிததமான திருககுறுஙகுடியில வநது அஙகு எழுநதருளியிருககினற நமபி எனனும எமபெருமானுடைய அழகை அநுபவிதது, அஙகு நிதய வாஸஞ செயய நினைததனா பின குமுதவலலியாருடனே விரகததராயச சிலகாலம யோக நிஷடையில எழுநதருளி யிருநது, தமது நூறறைநதாம பிராயததில, சமாதி யெனகிற மகா யோகததால திருமேனி நீததுத தேஜோமயமான திவய நகரஞ சோநதனா

வழி பறிததலாகிய அகிருததியததைச செயதாலும, அசசெலவம முழுவதையும பகவத பாகவத கைஙகாயததுககே உபயோகிததததனாலும,

அபாகவதர் பொருளை அபகரித்துப் பாகவதர்க்குரிய தாய் ஆக்கியதனாலும், புகழ் புண்ணியங்களை யொன்றிய பழிபாவங்களைச் சிறிதும் பெறாது பெருமாளுக்கு மிக்க முகோல்லாசத்தைச் செய்து சீருற்ற இத்திருமங்கை மன்னன், தமது திவ்யப் பிரபந்தங்களால் உலகத்தை நன்னெறிச் செலுத்திக் கலிதோஷத்தைக் கடிந்ததனால் "கலிகன்றி" என்னும் ஒரு திருநாமம் பெற்றனர்.

"கலந்த திருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியிற் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திகழாயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்து மாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற்றிருக்கை இருமடலீந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே
வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே"

திருமங்கை மன்னன் திருவடி வாழ்க

முற்றிற்று

PRINTED AT THE B N PRESS, MOUNT ROAD, MADRAS